விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 19 திங்கட்கிழமை (02.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடரும்

### மாணவர் ஒன்றியங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும்வரை விரிவுரைகளை புறக்கணிக்கிறோம் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வணிக, முகாமைத்துவ பீட மாணவர் ஒன்றியம், விவசாய பீட மாணவர் ஒன்றியம், கலைப்பீட மாணவர் ஒன்றியம், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு,

கடந்த 29.04.2011 (வெள்ளிக்கிழமை) யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் ஒன்றிணைந்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு (04ஆம் பக்கம் பார்க்க)



மே தின ஊர்வலத்தில் ஜனாதிபதி...

# புலிகளை தோற்கடித்தது மனித உரிமை மீறலா?

## ஜனாதிபதி மகிந்த கேள்வி

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற போரின்போது விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததைச் சிலர் போர்க்குற்றம் என்கின்றனர். சிலர் மனித உரிமை மீறல் என்கின்றனர். ஒரு இனத்தை அழிவிலிருந்து மீட்டது மனித உரிமை மீறலா? என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இல்லாத எதிரியை வளர்க்க முயற்சி செய்யக்கூடாது

### தயான் ஜயதிலக கருத்து

(கொழும்பு)

இல்லாத எதிரியை வளர்த்துவிட முயற்சி செய்யக்கூடாதென பிரான்ஸிற்கான இலங்கை தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

நாட்டின் நன்மதிப்பைக் கவர்ச்சிகரமானதாகவும் நெகிழ்வுத்தன்மையுடையதாகவும் உருவாக்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமெனவும் நாட்டின் நன்மதிப்பை அதிகரிப்பதற்கு உள்நாட்டு ரீதியில் பல்வேறு நடவடிக்கை எடுக்க (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புப்படை வீரர்களை ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாக்கும்

### கரு ஜெயசூரிய உறுதி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட பாதுகாப்புப் படை வீரர்கள் அனைவரையும் ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாக்கும் என அக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 18ஆவது சிரார்த்த தின வைபவத்தில் உரையாற்றுகையிலேயே கரு ஜெயசூரிய இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு செலுத்தும் சிறந்த அஞ்சலி அவரின் கொள்கைகளை பாதுகாப்பதாகும் எனக் கூறிய கரு ஜெயசூரிய நாடு பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்ட போது பிரேமதாஸ ஜனாதிபதியாக பதவியேற்று பல சவால்களுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்காக வீட்டோவை ரஷ்யா பயன்படுத்துமாம்!

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐ.நாவின் எந்தவொரு சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் அதற்கு எதிராக ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி முறியடிக்கும் என்று கொழும்புக்கான ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மிக்கலோவ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் தண்டனை வழங்கவோ அதை அவமானப்படுத்தவோ சில சக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகளை ரஷ்யா எதிர்த்து நிற்கும்.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கைக்கு எதிராக நாம் வீட்டோவைப் பயன்படுத்த மாட்டோம். ஆனால் அதைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதுவும் கொண்டுவரப்பட்டால் ரஷ்யா வீட்டோவைப் பயன்படுத்தலாம்.

ஐ.நா. அறிக் (20ஆம் பக்கம் பார்க்க)



## பூதாகரமாகும் போர்க்குற்ற விவகாரம்! புதுடில்லிக்கு விரைகிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எதிர்வரும் 16ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையைஅடிப்படையாக வைத்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்த முயற்சியை முறியடிப்பதற்கான இந்தியாவின் ஆதரவைப் பெறும் முகமாகவே இவர் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை மற்றும் இவ்வறிக்கையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து பீரிஸ் ஆலோசனை நடத்தவுள்ளார்.

அத்துடன் இந்தோனேசியாவில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளும் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக அந் நாடுகளின் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நடவடிக்கையை விரைவுபடுத்த கோரிக்கை

(கொழும்பு)

பிரித்தானியாவில் நேற்று பிரித்தானிய தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் மே தின ஊர்வலம் நடைபெற்றது. பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பிரித்தானிய வாழ் தமிழ் மக்களுக்கு விடுத்த குறுகிய கால அழைப்பை அடுத்து பெருமளவான தமிழ் மக்கள் மே தின ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் மத்திய லண்டனிலுள்ள பரிங்டன் நிலக்கீழ் தொடருந்து நிலையத்தில் ஆரம்பமான மே தின ஊர்வலம் மாலை 3.45 மணியளவில் ரவல்ஸ்குவயர் (20ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK Canada and India**

Intake Get Register Now Collecting
the Application Until June 30th 2011
Start the academic on September
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
(Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப்
படுத்திய வீசாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777

## ஒரு மாதக் குழந்தை சடலமாக மீட்பு

(சுன்னாகம்)

பிறந்து ஒரு மாதமேயான சிசுவின் சடலம் ஒன்று சுன்னாகம் மின்சார நிலைய வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தகவலொன்றினை அடுத்து சுன்னாகம் பொலிஸார் இச் சிசுவின் சடலத்தை மீட்டுள்ளனர். சடலத்தில் காயங்கள் காணப்படுவதாகவும் சடலம் நீலம் பாரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸார் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள

தொடர்புகளுக்கு:-0729994777

# நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு இரண்டு கட்டமாக பதிலளிக்கப்படும்

## இலங்கை அரசு தீர்மானம்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.**

நிபுணர்கள் குழுவால் இவ்வறிக்கையில் சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் விரைவில் உத்தியோகபூர்வமாக பதிலளிக்கத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் கையொப்பத்துடன் இந்த ஆரம்ப கட்டப் பதில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியின் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்பதை வலியுறுத்தும் வகையில் கொழும்பின் ஆரம்பகட்டப் பதில் அமையப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இந்த ஆரம்பகட்டப் பதிலைத் தொடர்ந்து நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பான முழுமையான பதிலறிக்கை ஒன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு கொழும்பால் அனுப்பி வைக்கப்படவுள்ளது.


இப் பதிலறிக்கையில் போருக்குப் பின்னர் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் வடக்கு கிழக்கு கட்டுமானப் பணிகள் குறித்து விளக்கப்பட்டு நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கப்பட உள்ளதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக் காலம் இம் மாதம் 15ஆம் திகதியுடன் முடிபடையவுள்ள நிலையில் இந்த ஆணைக் குழுவின் பதவிக் காலத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முடிபு செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட உள்ளதாக தெரியவருகின்றது. (ச-5)

## நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தால் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு இல்லை



### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதன் காரணமாக தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை அரசாங்கம் வழங்காதிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பண்டாரவளையில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யுத்தம் முடிபுற்றதன் நன்மைகளை அனுபவிக்க மக்களுக்கு உரிமை உள்ளது. ஆனால் அரசாங்கம் தொடர்ந்தும் சர்வதேச நாணய நிதியத்திற்கு கட்டுப்பட்டுள்ளது. அது எமது இறைமைக்கு முரணான எமது மக்களுக்கு சலுகைகளை அளிப்பதை நிராகரிக்கும் உடன்படிக்கையாகும். இந்த அரசாங்கத்தை மக்களின் நண்பனாக கருத முடியாது. மாறாக இது சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கேற்ப தொழிலாளர்களுக்கு எதிராக செயற்படும் அரசாங்கம் ஆகும் என ரணில் கூறினார்.

நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்காக மகஜரில் கையெழுத்திடுமாறு அரசாங்கம் மக்களை கோரினால் நாமும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு கோரும் மகஜரில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான கட்சியின் நிலைப்பாடு இவ்வாரம் அறிவிக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தொடரும். துரதிர்ஷ்டவசமாக அமைச்சர் தொண்டமான் 405ரூபாய் சம்பளத்துக்கு இணங்கியதால் தொழிற்சங்கங்கள் அந்தத் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ரவி சமரவீர, அரச சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா, ரஞ்சித் மத்தும பண்டார, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தேசிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சிறினால் டி மெல், ஊவா மாகாண சபை உறுப்பினர் கே.வேலாயுதம் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச-5)

## புலிகளின் பொருளாதார முக்கியஸ்தர் திலக்கும் உயிரிழந்ததாக தகவல் கசிவு





விடுதலைப் புலிகளின் பொருளியல் ஆலோசனை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமையாற்றிய திலக் என அழைக்கப்படும் சிவலிங்கம் சுகுணன் என்பவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளது.

இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனமாக பதிவுசெய்யப்பட்டிருந்த இந்த நிறுவனத்தில் பணியாற்றிய திலக் விடுதலைப் புலிகளின் முன்னாள் திருமலை மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவருமாவார்.

பொருளியல் ஆலோசனை அமைப்பில் பணியாற்றிய உறுப்பினர் ஒருவரே திலக்கின் சடலத்தை அடையாளம் காண்பித்துள்ளார்.

திலக் தான் சாதாரண உடையில் சரணடையப்போவதாக 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி தனது குடும்பத்தினரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் தடுப்பு முகாமில் இருந்து தப்பிய திலக்கின் முன்னாள் உதவியாளர் ஒருவர் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முக்கிய நபர்கள் தொடர்பில் மேலதிக தகவல்களையும் வெளியிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## மின்னல் தாக்கி மின் உபகரணங்கள் சேதம்

(நவாலி)

நவாலி அரசடிப் பகுதியில் மின்னல் தாக்கியதில் வீடுகளிலிருந்த மின்சார உபகரணங்கள் பாதிப்படைந்துள்ளன.

குடநாட்டின் பல பாகங்களிலும் நேற்று இடியுடன் கூடிய கனத்த மழை பெய்தது.

இதன்போதே குறித்த பகுதியில் வீடொன்றில் நின்ற தென்னை மரத்தின் மீது மின்னல் தாக்கியது.

தென்னைமரம் பாதிப்படைந்ததோடு மரத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

இடிமின்னலின் தாக்கத்தின் காரணமாக குறித்த பகுதியிலிருந்த வீடுகளில் பாவிக்கப்பட்டு வந்த மின்சார உபகரணங்கள் சேதமடைந்தன.

இடி மின்னல் தாக்கிய வீட்டின் மின்சார இணைப்புக்கள் அனைத்தும் எரிந்து நாசமாகின.

குறித்த வீட்டில் மட்டும் 60 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமதியான மின் உபகரணங்கள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர மோட்டார் சைக்கிள், மின்சார இணைப்பு பிரதான ஆளி என்பனவும் சேதமடைந்தன.

இவ்வாறு அப்பகுதியில் இருந்த வீடுகளின் பல லட்சம் ரூபாய் பெறுமதியான மின்சார உபகரணங்கள் செயலிழந்து போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6,26)

**கிளிநொச்சி ஆச்சிரமத்திற்கு கணனி பயிற்றுவிப்பாளர்கள் உடன் ஆட்சேர்ப்பு**

மகாதேவா சைவ சிறார் இல்ல ஆச்சிரமத்திற்கு கணனி கற்கை நெறிகளை வழங்கக்கூடிய கணனி விரிவுரையாளர்கள், கணனி பயிற்றுவிப்பாளர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் உடன் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பங்களை உடன் அனுப்பி வைக்கவும்.

ஆச்சிரமத்தில் தங்கியிருந்து கற்பிக்கக் கூடியவர்கள் மட்டும் எதிர்வரும் 7.05.2011க்கு முன்னர் சுய விபரங்களை தலைவர், மகாதேவா சைவசிறார் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

T.P:0773868566

தி.இராசநாயகம்
தலைவர்

(C-3130)

**காணி/ வீடு விற்பனைக்கு**

இளவாலை சிறுவிளானில் 42பரப்பு தோட்டக்காணியும், 1 1/2 பரப்பு குடியிருப்பு நிலமும், இளவாலை வடக்கு வேரவல்லில் 10பரப்புடன் வீடும் விற்பனைக் குண்டு. நேரடியாக/தொலைபேசி 0212228708, கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள் ஜோதிடர், V.A.சிவராசா, 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4827)

**ஆனந்தி திருமண சேவை**

**மணமகன் வேண்டும்**

கிரகபாவம் 11 1/2, உத்தராடம், 10ல் செவ்வாய், 85ல் பிறந்த அரசுத் தொழில் புரியும் பெண்மணிக்கு வெளியூர்/ உள்ளூர் மணமகனை விரும்புகின்றோம். தொடர்பு – கடிதம்/ நேரடியாக, தொலைபேசி 0212228708-, V.A.சிவராசா சோதிடர், 56அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4827)

# இன்று ஒரு தகவல்

## சரஸ்வதி மஹால்

தஞ்சாவூரை ஆண்ட சரபோஜி மன்னர் ஒரு சமயம் காசி யாத்திரை சென்றார்.

அவர் அந்தச் சமயத்தில் கொல்கத்தாவிலிருந்த ஆங்கிலேய ராஜப்பிரதிநிதியையும் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. அந்த ராஜப்பிரதிநிதி தமிழ் நாட்டிலிருந்து ஒரு மன்னர் தம்மை காணவருகிறார் என்று அறிந்ததும் தமிழ்நாட்டின் அருமை பெருமைகளை யெல்லாம் விசாரித்து வைத்துக் கொண்டார்.

அவர் ஏற்கனவே திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்து அதன் பெருமையைப் புரிந்து கொண்டிருந்தார். எனவே திருக்குறளின் தமிழ் மூல நூலைப்பற்றி தமிழ்நாட்டிலிருந்து வரும் மன்னரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத் திருந்தார். சரபோஜி மன்னரும் கொல்கத்தா வந்து ராஜப்பிரதியைச் சந்தித்தார்.

இருவரும் அமர்ந்து அன்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ராஜப்பிரதிநிதி சரபோஜி மன்னரிடம் "தமிழ் நாட்டில் தோன்றிய திருக்குறளின் ஆங்கிலமொழி பெயர்ப்பை நான் படித்து அனுபவித்திருக்கிறேன். மொழி பெயர்ப்பே அந்த அளவுக்குச் சிறப்பாக இருந்தாலும் மூலநூலின் சிறப்பு எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறேன்.. அதற்கு யாராவது விளக்கம் கூறிக் கேட்க வேண்டும் என்று நான் மிகவும் விரும்புகிறேன். ஆதலால் தாங்கள் திருக்குறளை எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

ராஜப்பிரதிநிதி இப்படிக் கேட்டதும் சரபோஜி மன்னர் சற்று யோசித்தார். ஏனெனில் அவரது தாய் மொழி மராட்டி. ஆதலால் தமிழில் திருக்குறளை எடுத்துச் சொல்லும் நிலையில் அவர் இல்லை.

இருப்பினும் சமயோசிதமாக அவர் ராஜப் பிரதிநிதியிடம் "என்னுடைய நூல் நிலையத்தில் இதைப் போன்று ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இருக்கின்றன. எனவே அவை எல்லாவற்றையும் நான் தெரிந்து வைத்துக் கொள்வது என்பது இயலாத காரியம். நான் தமிழகம் திரும்பியதும் அந்தப் புத்தகத்தை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்றார்.

"இதுபோல் இன்னும் எத்தனை தமிழ் நூல்கள் இருக்கின்றன?" என்று கேட்டார். ராஜப்பிரதிநிதி எவ்வளவோ இருக்கின்றது. அவற்றின் பட்டியலையும் நான் ஊருக்குத் திரும்பியதும் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன் என்றார் சரபோஜி மன்னர். "அப்படியே செய்யுங்கள்!" என்றார் ராஜப்பிரதிநிதி.

சரபோஜி மன்னர் தஞ்சாவூர் திரும்பியதும் தாம் வாக்களித்தபடியே ராஜப்பிரதிநிதிக்கு திருக்குறள் பிரதியையும் தமிழ் நூல்கள் அடங்கிய பட்டியலையும் அனுப்பி வைத்தார். இந்த நிகழ்ச்சி சரபோஜி மன்னரின் சிந்தனையை தூண்டி அவரை யோசிக்க வைத்தது.

தமிழ் நாட்டில் அரசராக இருந்து கொண்டு தமிழ் மொழியில் கவனம் செலுத்தாமல் இருந்தது எவ்வளவு பெரிய தவறு என்று அவருக்குப் புரிந்தது. இனிமேல் அவ்விதம் இருக்கக்கூடாது. தமிழ்ச் சுவடிகளையெல்லாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தமிழ்ப் புலவர்களையெல்லாம் ஆதரிக்க வேண் டும் என்று அவர் தீர்மானித்தார்.

அதன் விளைவுதான் இன்றைக்குத் தஞ்சாவூரில் இருக்கும் சரஸ்வதி மஹால் நூல் நிலையம்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மருத்துவ விற்பனை நிலையங்கள் மீதான முற்றுகை மூலம் 3.17 மில். ரூபா வருமானம்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத மருந்து விற்பனை நிலையங்கள் மீது ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகை மூலம் கடந்த வருடத்தில் மாத்திரம் 3.17 மில்லியன் ரூபா பெறப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் சுமார் 7 ஆயிரம் மருந்துவிற்பனை நிலையங்கள் இயங்குவதாகவும் அவற்றில் சுமார் 3 ஆயிரம் நிலையங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் டபிள் யூ எம்.டி வன்னிநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த வருடம் 2 ஆயிரத்து 969 நிலையங்கள் பதிவு செய்யப்பட்டன . இவ்வருடம் இதுவரை 322 மருந்து விற்பனை நிலையங்கள் பதிவு செய்யப்பட்டன என அவர் தெரிவித்தார்.

பதிவு செய்யப்படாத மருந்து விற்பனை நிலையங்கள், பதிவு செய்யப்படாத மருந்துகளை விற்பனை செய்தல் மற்றும் மருந்துச் சிட்டையின்றி மருந்து விற்பனை செய்தல் ஆகியவை தொடர்பாக ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அடிக்கடி மருந்து விற்பனை செய்து வருவதாக வன்னிநாயக்க மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பால்மா இறக்குமதி

பால்மா இறக்குமதிகளை இறக்குமதி நிறுவனங்கள் மட்டுப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

3 பால்மா இறக்குமதி நிறுவனங்கள் தமது இறக்குமதியை இவ்வாறு மட்டுப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால்மா உற்பத்திகளின் விலையை அதிகரிக்குமாறு அந்தந்த நிறுவனங்களால் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்தக் கோரிக்கைகளுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை தீர்க்கமான முடிவொன்றை அறிவிக்காத நிலையில் 3 பால்மா இறக்குமதி நிறுவனங்கள் தமது இறக்குமதிகளை மட்டுப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# திருவள்ளுவர் விழாவையொட்டி மாணவர்களுக்கான போட்டிகள்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் நடத்தும் திருவள்ளுவர் விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கமைய கண்டாவளை கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான நாவன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப 1 மணிக்கு முருகானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தமிழ்ச்சங்கத்தலைவர் அறிவித்துள்ளார்.

கரைச்சி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான நாவன்மைப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளி.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாவட்ட நிலைப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்தோடு குறள், இசை, தமிழ்க்கட்டுரை, நாட்டுப்புறக்கலைப் போட்டிகள் இறுதித் தேர்வாக நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-84)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50-60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60-70 | 50 | 75 |
| தக்காளி | 60 | 130 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 80 | 80 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | - | 70 | - |
| பயற்றங்காய் | 30 | 60 | 70 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 40 | 70 | 50 |
| கறிமிளகாய் | - | 80 | 70 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 400 |
| போஞ்சி | - | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 60 |

# இராசி பலன்

*02.05.2011*
*(சித்திரை 19,திங்கட்கிழமை)*
*சூரியஉதயம் காலை 5.57 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 11.29 மணிவரை*
*அச்சுவினி பின்னிரவு 2.54 மணிவரை*
*இராகுகாலம் 7.27-8.57 மணிவரை*
*சுபநேரம் 11.57-1.27 மணிவரை*
*உலக தாய்மார்கள் தினம்*
*அமாவாசை விரதம்.*

**மேடம்** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**இடபம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பழைய நண்பர்களின் சந்திப்பால் சிறு விரயம் ஏற்படலாம், தொழில் மாற்றம் ஏற்படலாம், சயன சுகக் குறையுண்டு.

**மிதுனம்** பிறர் பாராட்டும் வகையிலான வேலையொன்றைச் செய்வீர்கள், தொழிலில் திருப்திகரமான வருமானம் வந்து சேரும், எதிர்கால வெற்றிக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**கடகம்** தொட்டகாரியம் வெற்றி பெறும் நாள், ஆலயவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்லபாராட்டு கிடைக்கும், குடும்ப சுகம் அதிகரிக்கும்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், முன்கோபமும் அலைச்சலும் அகலும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்கவேண்டி வரலாம், வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, மனக்கிலேசமான நாள்.

**துலாம்** முன்னோர் வழிபாட்டால் முன்னேற்றம் காணவேண்டிய நாள், இன சன வருகையுண்டு, வெளியூர்ப் பயணத்தால் ஆதாயம் ஏற்படலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், திருமண முயற்சி வெற்றி பெறும், தொழிலில் முன்னேற்றமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு** பூமியால் இலாபமுண்டு , இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருட்சேர்கையுண்டு பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** பெற்றோர்களின் தேவைகளை பூர்த்திசெய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும்.

**கும்பம்** உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும்.

**மீனம்** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், பணவரவு திருப்தி தரும், வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள்.

வளவன்



யாழ்.மாவட்டத்திலிருந்து மே தினக் கூட்டத்திற்கு கொழும்பு சென்ற பொதுமக்களுடனும் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருடனும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துரையாடுவதனையும் நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

# தமிழ் மக்களின் உரிமைகளுக்காக கூட்டமைப்பு குரல் கொடுக்கும்

## மே தின உரையில் அரியநேத்திரன் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாணமென்பது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக தாயகம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை என்றும் தமிழ் மக்களுக்கான உரிமை கிடைக்கும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் குரல் கொடுக்கும் எனவும் மே தின உரையில் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் மே தினக் கூட்டம் நேற்று மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரியநேத்திரன் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தொழிலாளர்களுக்கான தினமாக மே தினம் கொண்டாடப்பட்டாலும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான, குரல் கொடுப்பதற்கான பல்வேறு அரசியல் கட்சிகள் தமது கட்சிகளின் கொள்கையை முன்வைக்கும் நாளாகவும் தொழில் சங்ககங்கள் தமது ஒற்றுமையைக் கட்டியெழுப்பி அவர்களின் உரிமைகளை உலகறியச் செய்யும் நாளாகவும் கடைப்பிடிப்பதை காணலாம்.

அந்தவகையில்தான் வடக்கு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கமும் மட்டக்களப்பில் இந்த பெருவிழாவை எடுத்திருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணமென்பது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக தாயகம். இதில் எந்தவொரு மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. இலங்கை சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டு தொடக்கம் 1960 மார்ச் 21ஆம் திகதி வரை வடக்கு கிழக்கில் இடம்பெற்ற அனைத்து பொதுத் தேர்தல்களிலும் எந்தவொரு சிங்கள மகனும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வரலாறு இல்லை.

காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசாங்கங்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அடிமைகள் போன்று நடத்த முற்பட்டார்கள். இதனால்தான் 61 வருடங்களுக்கு முன் எமக்கு விடுதலை வேண்டி அறவழியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது 31 வருடங்களுக்குப் பின் தந்தை செல்வாவின் ஆலோசனைக்கிணங்க ஆயுதப் போராட்டமாக மாற்றம் பெற்று 30 வருடங்களாக ஆயுதமேந்தியும் போராடி கடந்த 2009 மே 18ஆம் திகதியுடன் அந்த ஆயுதப் போராட்டமும் மௌனிக்கப்பட்டு இன்னும் விடுதலை இன்றி இருக்கின்றோம்.

இந்த நிலையில்தான் எமது அரசியல் பலம் அவசியமாகின்றது. அத்துடன் வடக்கு கிழக்கை அரசு பிரித்தாலும் இதேபோன்ற அமைப்புகள் வடகிழக்கை இணைத்தால் போல் செயற்படுவதை மக்கள் மனங்களில் இன்னும் எமது ஒன்றிணைந்த தமிழ் தேசிய உணர்வு இருப்பதை உணர்த்துகிறது என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (ச-5)

# தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை கண்காணிக்கச் சிறப்புப் பிரிவு

இலங்கை விவகாரத்தில் கருத்துகளை வெளியிடும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை முறியடிக்க வெளிவிவகார அமைச்சு சிறப்பு கண்காணிப்பு பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளது.

தமிழ்நாட்டின் நிலைமைகளை இந்தக் குழு கண்காணித்து எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

ஐ.நா. அறிக்கை வெளியான பின்னர் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டில் வலுப்பெற்று வருகிறது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் கருத்துகள் ஆங்கிலத்தில் அதிகளவில் வெளியாவதால் அவை அனைத்துலக ஊடகங்களில் இலகுவாகவே இடம்பிடித்து விடுகின்றன. இது இலங்கை அரசுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாட்டைக் கவனிக்க சிறப்புக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதையடுத்தே தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைக் கண்காணித்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சிறப்பு பிரிவு ஒன்றை உடனடியாக அமைக்கவுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்...

எதிராக போராட்டம் ஒன்றை தொடர்ந்த வண்ணம் இருக்கிறோம்.

அது தொடர்பிலான விரிவான விளக்கத்தையும், எமது பக்க நியாயத்தையும் சமூகத்தின் மீதுள்ள பொறுப்பின் நிமித்தம் தெரிவிப்பது கடமையென்று உணர்ந்து இச்செய்திக் குறிப்பை வெளியிடுகிறோம்.

எமது பல்கலைக்கழகம், மாணவர்களுக்கு மட்டுமன்றி தமிழ் சமூகத்தையும் வழிநடத்திச் செல்லும் சமூக அமைப்பு என்பதை தாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்றும் நம்புகிறோம்.

மாணவர்களது போராட்டமானது மூன்று பிரதான - நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்த வண்ணம் உள்ளது. மாணவர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பின்வருமாறு,

1) மாணவர்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஒன்றியத் தலைவரின் பல்கலைக்கழக உட்பிரவேசத் தடையை உடன் இரத்துச் செய்ய வேண்டும்.

2) மாணவ ஆலோசகரின் பதவியை உடனே நீக்க வேண்டும்.

3) மாணவ ஒன்றியத்திற்கு, மாணவர்களாகிய எங்களால் தெரிவு செய்யப்பட்ட ஒன்றியத் தலைவரை உள்வாங்கி, மாணவர் ஒன்றியம் உடன் மீள ஒருங்கமைக்கப்படுதல் வேண்டும்.

எமது பல்கலைக்கழகமானது எமது மாணவர்களுக்கு மட்டுமன்றி, சமூகத்தையும் வழி நடத்திச் செல்லும் நிறுவனம் என்பது தாங்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். எம் மாணவர்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக சில சமூக விரோத சக்திகள் கடந்த காலங்களில் பல தடவைகள் முயன்று வருகின்றமை தாங்கள் அனைவரும் அறிந்த விடயமாகும். இன்றும் சமூக விரோத சக்திகள் சில மாணவர்களிடையே உள்ள ஒற்றுமையை சீர்குலைத்தும், மாணவர்களின் போராட்டத்தை சீர்குலைத்தும் அதன் ஊடாக தங்களது சுயலாபங்களை தேட முனைகின்றனர்.

அத்துடன், யாழ்.பல்கலைக்கழகத்தை தமிழ் மக்களின் சமூக நிறுவனம் என்ற அந்தஸ்திலிருந்தும், எமது இனத்தின் மீதுள்ள பொறுப்பில் இருந்தும் இல்லாது ஒழிக்க, எமது சமூகத்திற்கும், பல்கலைக்கழக சமூகத்திற்கும் இடையிலான தொடர்பினை இல்லாமல் செய்வதற்கும் முயற்சிக்கின்றனர்.

இதற்கு சில மாணவர்கள் அறியாமையினால் துணை போவதும் எமக்கு பெரும் வேதனையளிக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளையும், இதன் பின்னாலுள்ள விடயங்களையும் மக்களாகிய நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என எண்ணுகிறோம்.

இத்துடன் தொடர்புடையதாகவே, இன்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நடவடிக்கைகளை குழப்பும் விதமாக செயற்படுகின்ற சக்திகளின் ஓர் சதியாகவே, மாணவர்களாகிய எங்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட ஒன்றியத் தலைவர்களுக்கு வகுப்புத் தடை வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் கடந்த பல மாதங்களாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மீள உருவாக்கப்படாமல் இருப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தப் போக்கே காரணம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படியான பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தப் போக்கை மாணவர்களாகிய நாம் எவ்வாறு ஏற்பது...?

இதனால், பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தப் போக்கை கருத்தில் எடுத்து, காலம் வீணடிக்கப்படக் கூடாது என்ற தீர்மானத்தின் பேரில், மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்களை தெரிவு செய்து, பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளித்திருந்தோம்.

இந்நேரத்தில் ஒரு மாதத்துக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய சிறு விடயத்தை சந்தர்ப்பவாதத்திற்கேற்ப, நிர்வாகத்தின் அதிகாரத்தை நமக்குச் சாதகமாக பாவித்து, நியாயமற்ற முறையில், நீதிக்குப் புறம்பாக, மாணவ ஒன்றியத் தலைவருக்கு வழங்கப்பட்ட உட்பிரவேச தடையாகும். இவ்வாறு நியாயம் இன்றி, நீதிக்குப் புறம்பான முறையில் வழங்கப்பட்ட இந்த வகுப்புத் தடையை நாம் எவ்வாறு ஏற்பது...?

மேலும் மாணவர்களின் போராட்டம் ஆரம்பித்த தினமன்று (29.04.2011), எமது வளாகத்தில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட ஓர் துக்ககரமான நிகழ்வு இடம்பெற்றுள்ளது. குறித்த ஊடகவியலாளர் நிர்வாகத்தின் சார்பிலான ஒருவரே, மாணவர்களை படம் பிடிப்பதாக எண்ணியதாலேயே, அந்த ஊடகவியலாளருடன்,- அவர் ஊடகப் பிரதிநிதி என்பதை அறியாமல் - சந்தர்ப்ப சூழ்நிலையில் நடைபெற்ற வருத்தமான நிகழ்வு என்பதுடன் இதற்காக மாணவர்களாகிய நாம் குறித்த பத்திரிகையிடமும், ஏனைய ஊடகச் சமூகங்களிடமும் மன்னிப்புக்கோரி நிற்கின்றோம்.

இதேபோன்ற நிகழ்வு எமது பல்கலைக்கழக வளாகத்தினுள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கும் உத்தரவாதம் தருகின்றோம். இறுதியாக மாணவர்களாகிய நாங்கள் எப்பொழுதும் பொறுப்புடனும், எமது மாணவர்களின் கல்வி சார்ந்த நடவடிக்கைகள் பற்றிய அக்கறையுடனுமே சிந்தித்துச் செயற்படுகின்றோம். எவருக்கும் அசௌகரியங்கள் ஏற்படுவதையும் நாங்கள் விரும்பவில்லை. அதேநேரம் எங்கள் உரிமைகளையும், யாருக்காகவும் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்றும். தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே இச்சூழ்நிலைக்குள், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக மாணவர்களாகிய எங்களால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகளை உடனடியாக தீர்த்து வைக்க பல்கலைக்கழக நிர்வாகம் முன்வர வேண்டும் என்றும் அதுவரை மாணவர்களாகிய நாம் விரிவுரைகளை புறக்கணிப்பதென்றும், மாணவர் ஒன்றியம் ஊடகங்களின் வாயிலாக அறிவிக்கும்வரை இப்போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# பாதுகாப்பு பேரவை நாடுகளுக்கு ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் விளக்கமளிக்கவுள்ளார்?

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை உறுப்பு நாடுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட ரீதியில் விளக்கமளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பாதுகாப்புப் பேரவையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளுக்கும் ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் எழுத்துமூலம் விளக்கமளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிபுணர் குழு அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஜனாதிபதி விளக்கவுள்ளார்.

வீட்டோ அதிகாரமுடைய ஐந்து நாடுகளிற்கும் ஜனாதிபதி விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை மற்றும் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

நிபுணர் குழுவின் குற்றச்சாட்டுக்களை முறியடிக்கும் நோக்கில் ஜனாதிபதி பிரசாரங்களை மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மறைந்த போப் 2ஆம் ஜான் பாலுக்கு அருளாளர் பட்டம் அறிவிப்பு

மறைந்த போப் 2 ஆம் ஜான் பாலிடம் வேண்டிய பலருக்கு அற்புதங்கள் நிகழ்ந்ததாக கூறப்பட்டது. இது உறுதி செய்யப்பட்டதையடுத்து அவருக்கு நேற்று அருளாளர் பட்டம் வழங்கப்பட்டது.

அருளாளராக அறிவிக்கும் விழா தற்போதைய போப் 16 ஆம் பெனடிக்ட் தலைமையில் வத்திக்கான் நகரில் நடந்தது.

இதற்கான சிறப்பு வழிபாட்டில் போப் ஜான்பால் அருளாளராக உயர்த்தப்படும் அதிகார பூர்வமான அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் திரண்டு இருந்தனர். (ஸ்ரீ-2)

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஜேர்மன் அரசு வாழ்வாதார உதவி



(கொழும்பு)

வட பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஜேர்மன் அரசாங்கம் பல தரப்பட்ட உதவிகளை செய்ய முன் வந்துள்ளது.

இதற்கமைய ஜேர்மன் அரசு உதவித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு 275 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

விவசாயம் மற்றும் கடற்றொழில் துறைக்கான உதவிப் பொருட்களையும் ஜேர்மன் அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்த உதவிப் பொருட்கள் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜீன்ஸ் புளோட்டளரால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கடந்த 28 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. சுமார் 44 மில்லியன் ரூபாய் பெறுமதியான உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், மருந்து தெளி கருவிகள், வேறுபல உபகரணங்கள் உட்பட ஒரு தொகுதி உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிப் பொருட்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சுமார் 3 ஆயிரம் குடும்பங்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 1700 குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வாழ்வாதார தந்திரோபாய அபிவிருத்தி கல்வி அபிவிருத்தி ஆலோசனை சேவைகள் மற்றும் விதவைகளுக்கான உதவிகள் என மூன்று பிரிவுகளின் கீழ் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# வடிவேலுவைக் கண்டித்து ரஜனியின் ரசிகர்கள் பரபரப்பு சுவரொட்டி

திருச்சி நகரில் வடிவேலுவைக் கண்டித்து ரஜனி ரசிகர்கள் ஒட்டியுள்ள சுவரெட்டியால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

நடிகர் ரஜனிகாந்த் எந்திரன் படத்துக்கு பின் ராணா படத்தில் நடித்து வருகிறார். இதற்கான படப்பிடிப்பு தொடங்கியது. இந்த நிலையில் ராணா படத்தில் முதலில் வடிவேலு நடிக்க இருப்பதாகவும் பின் அவருக்கு பதில் நடிகர் கஞ்சாக்கருப்பு நடிப்பதாகவும் கூறப்பட்டது.

இதனால் ராணா படத்தில் இருந்து நீக்கப்பட்டது ஏன் என்று வடிவேலுவிடம் கேட்ட போது, ராணா படமாவது கானா படமாவது எதைப் பற்றியும் கவலையில்லை என்று கூறினார்.

இது ரஜினி ரசிகர்களை ஆத்திரப்படுத்தி உள்ளது. வடிவேலுவுக்கு ரஜினி ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். திருச்சியில் வடிவேலுவை கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர்.

அதில் வன்மையாக கண்டிக்கிறோம். திரையுலகில் 3 தலைமுறைகளை வென்ற முடிசூடா மன்னன் எங்கள் அன்புத் தலைவர் சுப்பர் ஸ்டாரின் ராணா படத்தை பற்றி தரக்குறைவாக பேசிய காமெடி கைப்புள்ளையை வன்மையாக கண்டிக்கிறோம். இவன் ஸ்ரீரங்கம் நகர தலைமை ரஜினிகாந்த் நற்பணிமன்றம் என கூறப்பட்டு உள்ளது.

இந்த சுவரொட்டியினால் திருச்சியில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது. திருச்சி, ஸ்ரீரங்கம் உட்பட பல பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# கிளிநொச்சியில் மீள்குடியேற்ற பகுதிகளுக்கு மின்சாரம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட சில பகுதிகளுக்கு இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட கிளையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கையில் மிகவும் பாதிக்கப்பட்ட திருநகர், ஜெயந்திநகர், கணேசபுரம், பரவிப்பாஞ்சன், அம்பாள்குளம், விநாயகபுரம், திருவையாறு போன்ற பகுதி மக்கள் குடியிருப்புக்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டமக்கள் என்பதனால் இந்தப் பகுதி மக்களுக்கு இலங்கை மின்சார சபை ஒரு வருடத்துக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கி வருகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் இனப்படுகொலை நடந்ததென அறிவிக்க வேண்டும்

## ஐ.நா.வுக்கு திருமாவளவன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களைக் கொன்றொழித்தது இனப்படுகொலை என்று ஐ.நா. அறிவிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா.அறிக்கை குறித்து விவாதித்த இந்திய நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது பேசிய அக்கட்சியின் தலைவர் திருமாவளவன்,

இலங்கையில் படுகொலை நடந்து முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து தாமதமாக அறிக்கை வெளியிட்டாலும் உண்மையான அறிக்கையை வெளியிட்ட ஐ.நா.சபை முடிவை வரவேற்கிறோம். வெறும் போர்க்குற்றம் என்று மட்டும் பார்க்காமல் இனப்படுகொலை என்று அறிவிக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் அவசரமாகக் கூட்டி ஐ.நா.சபை அறிக்கை குறித்து விவாதிக்க வேண்டும். சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கையை ஆதரிப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும். இலங்கையை இந்தியாவும் ஆதரிக்கக்கூடாது.

இலங்கை தமிழர்களுக்காக உயிர்நீத்த சிவகாசியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தியின் நினைவாக கூட்டம் நடத்தப்படும் என்றும் ஒரு இலட்சம் ரூபாய் அவரது குடும்பத்திற்கு வழங்கப்படும் என்றார். (ஸ்ரீ-2)



## கந்தபுராண படிப்பு

(மருதங்கேணி)

தென்புலோலி உபயகதிர்காம சக்கர சண்முக தேவஸ்தானத்தின் இவ்வாண்டுக்கான கந்தபுராண படிப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 45 நாட்கள் புராண படிப்பு நடை பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 31 ஆம் திகதி மகேந்திர காண்டமும் எதிர்வரும் ஜுன் மாதம் 12 ஆம் திகதி தெய்வானை அம்மன்திருக்கல்யாண படலமும் வள்ளி திருமண படலமும் படிக்கப்படும். 24 ஆம் திகதி அன்னதானமும் மறுநாள் விளாத்தி மடையுடன் நிறைவு பெறவுள்ளது. (ஸ்ரீ-3-35)

## பாடசாலை மாணவர்களுக்கான சமூக விஞ்ஞானப் போட்டி

(அல்வாய்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் சமூக விஞ்ஞானப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

200 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலை, 201 தொடக்கம் 500 வரை யான மாணவர்களைக கொண்ட பாட சாலை, 501 தொடக்கம் ஆயிரம் வரையுள்ள மாணவர்களைக் கொண்ட பாடசாலை, ஆயிரத்திற்கு கூடுதலான மாணவர்களைக் கொண்ட பாடசாலை என 4 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

போட்டிகள் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம் ,மாகாண மட்டம், அகில இலங்கை தேசிய மட்டப் போட்டிகள் என 5 மட்டங்களில் நடைபெறும்.

தரம் 6-9 வரையான மாணவர்களுக்கான வினாத்தாள்கள் வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் பாடவிதானத்திற்கமைய மற்றும் அண்மித்த இரண்டு வருடகால சமகால தகவல்கள் சார்ந்ததாக தயாரிக்கப்படும்.

தரம்10, 11 ஆகிய மாணவர்களுக்கான வினாப்பத்திரம் வரலாறு பாடவிதானத்திற்கு அமைய மற்றும் சமகால அரசியல், பொருளாதார, கலாசார மற்றும் சமூக தகவல் சார்ந்ததாக தயாரிக்கப்படும்.

தரம் 12, 13 ஆகிய மாணவர்களுக்கான வினாப்பத்திரம் பாடவிதானத்திற்கு அமையவும் சமகாலத் தகவல்கள் தொடர்பாகவும் நடத்தப்படும்.

மற்றும் விசேடமாக பொது அறிவு, தர்க்கம், விளக்கம், பிரச்சினைகளை தீர்ப்பதற்கான திறமைகள் மதிப்பீடு செய்யப்படும்.

பாடசாலை மட்டப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னரும் கோட்ட மட்ட போட்டிகள் மே மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்பட வேண்டுமென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான. கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அதிபர்களை கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கடமை நிறைவேற்றும் அதிபர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அமைப்பின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளதென கடமை நிறைவேற்றும் அதிபர்களின் சங்கத் தலைவர் நா.கண்ணதாசன் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் சகல கடமை நிறைவேற்றும் அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## மரதனோட்டப் போட்டியில் வெற்றீட்டியோர் விபரம்

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான 21 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப்போட்டி நேற்றுக்காலை 10.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கு முன் இடம்பெற்றது.

இதில் இருபாலாருக்குமான மரதனோட்டப் போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்ற வீர வீராங்கனைகள் மாகாண மட்ட மரதனோட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதில் முதல் 10 இடங்கள் பெற்ற வீரர்களின் பெயர்களை வடமராட்சி கல்விவலய உடற்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன் அறிவித்துள்ளார். அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆண்கள் பிரிவு**

ம.மாதவன் (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), ஜெ.யோகராஜ் (தொண்டைமானாறு வீரகத்தி), சு.நாகேஸ்வரன்(யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வராவித்தி.), யோ.ஸ்ரலின் தீபன்( அல்வாய் வடக்கு றோ.க.த.க), க.சுதர்சன்(தொண்டைமானாறு வீரகத்தி), யா.நிமலன் ( வல்வை சிவகுரு வித்தி), அ.கன்மொறியஸ் (யா/பொலிகை இ.த.க.), கு.இருதயராஜ் (அல்வாய் வடக்கு றோ.க.த.க), து.கெங்காதரன் (யா/சிதம்பராக் கல்லூரி), ச.தனுசன் (தொண்டைமானாறு வீரகத்தி)

**பெண்கள் பிரிவு**

இ.நளாயினி (பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை), ப. லிப்பில் றெஜீனா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), எ.மேரி கனிஸ்ரலா (யா/ சென்தோமஸ் றோ.க.த.க.பா), ரி.டிலக்சனா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ர.அருந்ததி (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி), பா.ஆன்ற் டன்சிகா (சென் தோமஸ் றோ.க.த.க.பா), சி.விஜிதா (நாகர் கோவில் மகா வித்தியாலயம்), ம.பரிமளா (நாகர் கோவில் மகா வித்தியாலயம்), செ.சசிகலா (நாகர் கோவில் மகா வித்தியாலயம்), வெ.ஜீவிதா (நாகர் கோவில் மகா வித்தியாலயம்), (ஸ்ரீ-3-24)




## மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் படுகாயம்

(கரவெட்டி)

கரவெட்டி கோவிற் சந்தைப் பகுதியில் போட்டிக்கு மோட்டார் சைக்கிள் ஓடிய வேளை வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்த வயோதிபரை மோதிய விபத்தில் வயோதிபர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

நெல்லியடியில் இருந்து இரு மோட்டார் சைக்கிளும் அதனை பின் தொடர்ந்து மூன்று துவிச்சக்கர வண்டியும் அதிவேகமாக போட்டிக்கு ஓடியுள்ளன.

அப்போது கோவிற் சந்தைப் பகுதியில் வீதியால் வந்த வயோதிபரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் துன்னாலை வேம்படிப் பகுதியைச் சேர்ந்த கந்தையா செல்லன் (வயது65) என்ற வயோதிபரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-3-24)

## பாசிக் நிறுவனத்தால் வழங்கப்பட்ட படகு இயந்திரங்கள் விற்பனை

### அந்நிறுவன பிரதிநிதி தெரிவிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட 6 சங்கங்களுக்கு பாசிக் நிறுவனத்தினால் சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் படகு, இயந்திரம் என்பன வழங்கப்பட்டன.


மேற்படி உதவிகளைப் பெற்ற பயனாளிகளின் 30 படகு இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பாசிக் நிறுவன பிரதிநிதி தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மாதாந்த கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பிட்ட இயந்திரங்களை விற்றவர்களுக்கு எதிரான நடவடிக்கை விரைவில் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் சமாசம் ஊடாக அரச அதிகாரிகள் துணையோடு யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் நீரியல் வளத்துறை திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-3-64)

## மாதாந்த ஒன்றுகூடல்

பொற்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளதாக சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-64)


யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புத்தாண்டு விளையாட்டு விழா அண்மையில் யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதேச கணக்காளர் திருமதி.ச.சுரோஜினி, யாழ்.நகர் மேற்கு வங்கி முகாமையாளர் திருமதி.சுதர்மினி ஆகியோர் நிற்பதையும் உதவி முகாமையாளர் சொல்லருவி த.கருணாகரன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் கதிரேசன் கோவில் பிரதம குரு நாராயணகுருக்கள், யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் இ.இரகுநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் யாழ்ப்பாண சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவ பணிப்பாளர் ம.கியூமன் மதுவிலிருந்து மீண்ட நபரை நேர்காணல் செய்வதனையும் படங்களில் காணலாம்.

# ஈழம்...கொடூரமும் கொலையும்

## அம்பலமாகும் ஐ.நா. அறிக்கைத்தொடர் - 01

ஈழம் கருவறுக் கப்பட்டு இரண்டாவது வருடம் நெருங்கும் வேளையில், அங்கே நடந்த கொடூரங்களை அம்பலப்படுத்தும் விதமாக விசாரணை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது ஐ.நா.நிபுணர்குழு. நினைக்கவே நெஞ்சு நடுங்க வைக்கும் நிகழ்வுகளை உலகத்தின் முன்னால் ஆதாரங்களுடன் வைத்து, இலங்கையின் கோர முகத்திரையைக் கிழித்து இருக்கும் அந்த அறிக்கையின் தமிழாக்கம் தகிக்கத் தகிக்க இங்கே...



நினைத்துப்பார்க்க முடியாத கொடும் துயரத்தோடும் மிகுந்த சர்ச்சைகளோடும் முடிவுக்கு வந்தது இலங்கைப்போர்!

விடுதலைப்புலிகள் அமைப்புக்கெதிராக நடத்தப்பட்ட 27 ஆண்டுகால துப்பாக்கிச் சண்டை நிறைவுக்கு வந்திருப்பதாக, இலங்கையின் பெரும்பகுதி மக்களும் உலகின் பல்வேறு தரப்பினரும் நம்புகின்றனர். ஆனால், இந்த வெற்றிக்காக இலங்கை இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள், பல தரப்புமக்களையும் அதிர்ச்சி யடைய வைத்தது. போரில் புலிகள் வடகிழக்குக் கடலோரப் பகுதியான வன்னிக்குத் தள்ளப்பட்டதால், இலட்சக்கணக்கான தமிழர்கள் எங்கேயும் தப்பிச்செல்ல முடியாதபடி வலிமையான இரண்டு போர்க் குழுக்களுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டனர். இதனால்தான்,



உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. இலங்கை இராணுவத்தினரின் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலால் முதியவர்களும் பெண்களும் குழந்தைகளும் தாக்குண்டு சிதறினார்கள். மறுபுறம் இராணுவத்திற்கு எதிராகப் புலிகள் நடத்திய தாக்குதலிலும் தமிழ் மக்கள் சிக்கிக்கொண்டனர். போர்ச்சூழலில் மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டிய இலங்கை அரசு, பாதிக்கப்பட்ட மக்களை அடக்குவதிலேயே குறியாக இருந்ததுதான் பெரும் துயரம்!

கடைசிக்கட்டத்தாக்குதல் உக்கிரமாக நடந்தது. அதனால், அந்த இடத்திலிருந்து எந்தத் தகவலையும் அறிய முடியவில்லை. 'என்ன நடந்தது? என்கிற புதிர் விலகும் முன்னரே, அதிபர் ராஜபக்ஷ 2009 மே 19 ஆம் திகதி, போரின் வெற்றியை அறிவித்தார். அதனால் இறுதிக் கட்டத்தாக்குதலின் கடுமையும், பாதிப்புகளும் உலகுக்குத்தெரியாமலே




போய்விட்டது. போர்முடிந்த சில நாட்களுக்குப்பின்னர், ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கிமூன் இலங்கைக்குப்போனார். போர் நடந்த சில இடங்களையும், சில முகாம்களையும் பார்வையிட்டார். அதன் தொடர்ச்சியாக, நிபுணர்குழு அமைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் தொடக்கத்தில் தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்வதில் அதிக அக்கறை காட்டினர். இதற்காக குடும்பத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில், தங்கள் அமைப்பில் ஆட்களைச் சேர்த்துக்கொண்டனர். போரின்

**தமிழில்: அன்ரனிராஜ்**

தீவிரத்தால் ஒரே குடும் பத்திலிருந்து பலரையும் தங்கள் அமைப்பில் உறுப்பினராக சேர்க்கும் சூழலுக்கு புலிகள் தள்ளப்பட்டனர். பதுங்கு குழிகள் தோண்டும் பணிகளில் பொது மக்களையும் ஈடுபடுத்தினர். 2008இல் புலிகளின் படைபலம் கணிசமாகக் குறைந்துவிட்டது. அவர்களின் உண்மையான எண்ணிக்கை குறித்துத் தெரியவில்லை. புலிகள் வலிமையாக இருந்தபோது, 20 ஆயிரம்பேர் அந்த அமைப்பில் இருந்துள்ளனர். ஆனால் இறுதிக்கட்டப் போரில், அவர்களின் எண் ணிக்கை வெகுவாகக் குறைந்து வெறும் 5 ஆயிரம் ஆகிவிட்டது.

புலிகளை மேலும் முடக்கும் வகையில் 'அமைப்புடன் தொடர்புடையவர்கள்' என சந்தேகிக்கப்பட்ட நபர்களைக்கூட இராணுவம் சித்திரவதைக்கு உட்படுத்தியது. இதற்காக 'வெள்ளைவான்' என்ற ஒப்பரேஷன் நடத்தப்பட்டது. புலிகளின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டவர்கள், அந்த வானில் பிடித்துச் செல்லப்பட்டார்கள். அதில் பலர் காணாமலேயே போனார்கள். கொல் லப்பட்டவர்களின் உடல்கள் இரகசியமாக



மறைக்கப்பட்டன. பலர் திரும்பி வராததால், அவர்கள் குறித்து அறியமுடியாத நிலை!

மனித உரிமை ஆர்வலர்கள், செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எனப்பல்வேறு தரப்பினரும் இந்த 'வெள்ளை வான்' ஒப்பிரேஷனுக்கு இரையாகினர். செய்திகளுக்குக் கடுமையான தடைகளும், நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன. செய்தியாளர்கள், விடுதலைப்புலி



களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்குள் செல்லத்தடை விதிக்கப்பட்டது. சில பத்திரிகையாளர்களின் பெயர்கள், 'புலிகளின் ஆதரவாளர்கள்' என்று இராணுவத்தின் இணையத்தளத்தில் பகிரங்கமாகக் குறிப்பிடப்பட்டன.

போர்ச்செய்திகளை வெளியிட கடுமையான நிபந்தனைகள் 2008 இல் விதிக்கப்பட்டன. இதனை மீறிய பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் மிரட்டப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டனர். போர் முடிந்த பிறகும் இந்த மிரட்டல்கள் வழக்கத்தில் இருந்தன. அரசை விமர்சித்த பத்திரிகையாளர் லசந்த



விக்கிரமதுங்க கொலைசெய்யப்பட்டார். போத்தல ஜெயந்த 'வெள்ளை வானில்' தூக்கிச் செல்லப்பட்டு கடுமையான தாக்குதலுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார். பல செய்தி நிறுவனங்கள் நொறுக்கப்பட்டன. இது குறித்து அரசு எந்த விசாரணையும் நடத்தவில்லை. இறுதிக் கட்டப் போரின்போது, ஐ.நா. தொண்டு நிறுவனத்தினர், கிளிநொச்சியைவிட்டு வெளியேறிச் சென்றனர். உதவிக் குழுக்களின் உணவு விநியோகத்தை இராணுவம் தடுத்தது. தளபாடங்கள் மற்றும் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக இராணு வப்பயன்பாட்டிற்காக எடுத்துக் கொண்டது. அதனால் மக்களுக்கு உணவுப்பொருட்களைக் கொடுக்க முடியவில்லை. பசியின் கோரப் பிடியில் சிக்கித் தமிழ்மக்கள் கதறினார்கள்.

இத்தகைய இக்கட்டிலும் உதவிக் குழுவினர் தங்களிடம் இருந்த பொருட்களை மக்களுக்கு விநியோகம் செய்தார்கள். ஆனால், இந்த இடத்தில் இருந்து அவர்களால் வெளியேற முடியாத அளவுக்கு இருதரப்பினரதும் தாக்குதல் இருந்தது. இறுதிக் கட்டப்போரில், இலங்கை இராணுவம் அதிக அளவில் மக்கள்வசிக்கும் பகுதிகளைக் குறிவைத்து கொடூரத்தாக்குதல் நடத்தியது. மருத்துவமனைகளைக் கூட இராணுவம் விட்டுவைக்க



வில்லை. காயமடைந்த விடுதலைப் புலிகள் சிகிச்சை பெறுவதாக நம்பப்பட்ட மருத்துவமனைகள் மீது மீண்டும்மீண்டும் தாக்குதலை நடத்தியது இராணுவம்!

(தொடரும்)

ஜூனியர் விகடன்

# நிபுணர்குழு அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பமைச்சினால் வெள்ளை அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

**ஐ.நா.நிபுணர்குழு அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பமைச்சினால் யுத்தத்தின் இறுதிக்கட்ட சம்பவங்களை உள்ளடக்கிய வெள்ளை அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளது.**

உலகின் பல நாடுகள் பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம் அல்லது உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் அவ்வாறான வெள்ளையறிக்கைகளை வெளியிட்டிருந்ததை முன்னுதாரணமாகக் கொண்டு பாதுகாப்பு அமைச்சும் பிரஸ்தாப வெள்ளை அறிக்கையை வெளியிடவுள்ளது.

இஸ்ரேல் உள்ளிட்ட பல நாடுகள் தாங்கள் முகம் கொடுத்த நேர்ந்த யுத்தங்கள் தொடர்பில் அவ்வாறான அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

நிபுணர் குழு அறிக்கையில் இடம்பெற்றுள்ள இலங்கைக்கெதிரான கருத்துக்களை நிராகரிப்பதுடன் உண்மை நிலவரத்தை தெளிவாக விளக்கும் வகையில் பிரஸ்தாப வெள்ளை அறிக்கை தயாரிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

பாதுகாப்பமைச்சினால் தயாரிக்கப்படும் வெள்ளையறிக்கையில் யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் நடந்த சம்பவங்கள் திகதி வாரியாக விளக்கப்படவுள்ளது. அத்துடன் யுத்தகளத்தில் இருந்து எடுக்கப்பட்ட மிகவும் அபூர்வமான சில புகைப்படங்களும் அதில் உள்ளடக்கப்படவுள்ளன.

மேலும் வெள்ளை அறிக்கையுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் குறித்த சட்ட வியாக்கியானங்களும் அதில் இடம்பெற்றிருக்கும் என்று கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## கைத்தொலைபேசி ஊடாக பல்வேறு மோசடிகள்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக இடம்பெறுகின்ற நிதி மோசடிகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாக சர்ட் எனப்படும் இலங்கை கணனி அவசர நடவடிக்கை ஒன்றியம் குறிப்பிடுகின்றது.

சர்வதேச ரீதியாக இடம்பெறுகின்ற இந்த நிதி மோசடிகள் இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் பரவக்கூடிய கூடுதல் அபா யம் நிலவுவதாக அந்த ஒன்றியத்தின் தகவல் பாதுகாப்பு சிரேஷ்ட பொறியலாளர் ரோஹண பல்லியகுரு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மைக்ரோ சொப்ட் நிறுவனத்தினால் சிங்கப்பூர் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது போன்ற முறைகேடுகள் குறித்து முறைப்பாடுகள் இருப்பின் தமது ஒன்றியத்திற்கு தெரியப்படுத்துமாறும் ரோஹண பல்லியகுரு குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## வேலணைக் கோட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

வேலணைக் கல்விக் கோட்ட தமிழ்த்தினப்போட்டிகளில் கலைத்திறன் போட்டிகள் யாவும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு வேலனை மத்திய கல்லூரியில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்ட போட்டிகளும் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை அதிபர்கள் மற்றும் பொறுப்பாசிரியர் கவனத்திற் கொள்ளுமாறு வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு. சரவணபவானந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் மீள் மதிப்பீடு

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் மீள்மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பான நடைமுறைகள் கடுமையாக்கப்படவுள்ளதாக குடிவரவு , குடியகல்வுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிறந்த நாட்டுக்கு நேர்மையாக இருப்பவர்களுக்கு மட்டுமே இரட்டைக்குடியுரிமை வழங்கப்படும் என குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

உரியமுறையில் வரி செலுத்தி நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவோருக்கு மட்டுமே எதிர்காலத்தில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1987ஆம் ஆண்டு இரட்டைக் குடியுரிமைச் சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் எந்தநேரத்திலும் நபர் ஒருவரின் இரட்டைக் குடியுரிமையை பாதுகாப்பு அமைச்சினால் இரத்துச் செய்யமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிற்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தற்போது இரட்டைக் குடியுரிமை அந்தஸ்துக் கோரி நிற்பதாக அவர் தெரிவித்துள்ளார். எனினும் இரட்டைக் குடியுரிமையாளர்கள் தொடர்பான புதிய மீள் மதிப்பீடுகளின் போது இன,மத அடையாளங்கள் பிரதானமாகக் கருதப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறைமுக நோக்கங்கள் இன்றி இலங்கைக்கு உதவி செய்யக்கூடிய அனைவருக்கும் தொடர்ந்தும் இரட்டைக்குடியுரிமை வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

35ஆயிரம் பேருக்குமேல் தற்போது இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் நடவடிக்கையை அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அமெரிக்க தூதுவருடனான சந்திப்பு இராஜதந்திர ஒழுங்குகளுக்கு புறம்பானது

## ரஜீவ விஜயசிங்க எம்.பி.தெரிவிப்பு

அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பு இராஜதந்திர ஒழுங்குகளுக்கு புறம்பான வகையில் அமையப் பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளரார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் வெளிநாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு அதிகாரிகள் அண்மையில் அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில். பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பிற்கு அரசாங்கத் தரப்பினரோ அல்லது அரசாங்கதிற்கு எதிர்ப்பை வெளியிடாத தன்னார்வ தொண்டு நிறுவனங்களோ அழைக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சந்திப்பில் டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து, சிரானி சேவியர், ஜே.சீ. வெலியமுன, சுதர்சன் குணவர்த்தன, சுனிலா அபேசேகர மற்றும் இந்தியா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், நெதர்லாந்து, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா,ஜப்பான், நோர்வே, தென் ஆபிரிக்கா, தென்கொரியா, சுவிற்சர்லாந்து, இத்தாலி ஆகிய இராஜதந்திரிகளும் ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




# ஐ.நா.வுக்கெதிராக நேரடி எதிர்ப்பை வெளிக்காட்டாதிருக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

நிபுணர்குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகளுக்கெதிராக நேரடி எதிர்ப்பை வெளிக்காட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் நிபுணர் குழுவின் அறிக்கைக்கெதிரான பாரிய ஆர்ப்பாட்டங்கள், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உருவ பொம்மையை எரித்தல், ஐ.நா அலுவலகத்தை முற்றுகையிடல் அல்லது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் அரசாங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே அரசாங்கத்தினால் பிராஸ்தாப தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்லது ஐ.நா மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் ஊழியர்களுக்கு அச்சுறுத்தலான நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் தாங்கள் இலங்கைக்கு ஆதரவாக வெளிப்படையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படலாம் என்று ரஷ்யாவும் சீனாவும் அறிவுறுத்தியுள்ளன.

அதன் காரணமாக எந்தக் கட்டத்திலும் ஐ.நா.செயலாளர் நாயகத்தின் உருவ பொம்மை எரிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆளுங்கட்சி அமைப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# எங்கள் குறை தீர்வது என்றோ?

நாவலர் வீதியிலும் பின் பலாலி வீதி, பிறவுண் வீதி எனப் பல இடங்களிலும் மிகச் சிறப்பான முறையில் இயங்கி வந்த கால்நடை வைத்தியசாலை திடீரென இழுத்து மூடப்பட்டுள்ளது.

காரணம் என்னவென்று வினவியபோது, வைத்தியசாலைக்கு இடம் தந்தவர்கள் கூடிய வாடகை கேட்டதால் வேறிடம் தேடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு வரி விதிப்பதற்கு ஏற்ப குறைந்த வாடகையில் கட்டடம் கிடைக்காத காரணத்தால் மூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கால்நடைகள், வளர்ப்புப்பிராணிகள், கோழிகள் எனப் பல உயிர்களை வளர்ப்பவர்கள் வேறு போக்கிடமின்றி பிரத்தியேகமாக இயங்கும் வைத்தியசாலையிடம் தஞ்சமடைந்ததால் அங்கு ஆலோசனை வழங்கல், வைத்திய உதவி என பெரும் தொகைப் பணம் செலவிடவேண்டியுள்ளது.


பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவர். உண்மையாக யோசித்துப் பார்த்தால் இன்றைய நிலையில் எத்தனை பேர் இவ்வளவு பணம் செலவிட்டு வைத்திய வசதி தேடிப் பெறமுடியும் என்பதை உரியவர்கள் சிந்திப்பார்களா?

குறைந்த வாடகையில் கட்டடம் கிடைக்கவில்லை என்ற ஒரே சாக்கில் எத்தனை வாய்பேசா உயிர்களோடு விளையாட வேண்டியுள்ளது.

எனவே, உயிர்களின் பெறுமானம் கருதியாவது எமக்கு உதவி செய்ய உரியவர்கள் முன்வரும்படி மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பாதிக்கப்பட்ட மூத்த பிரஜை.**

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?



## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வரை)

**"வருமானங்கள் திருப்தி தரும்! வழிபட்டாலோ வளர்ச்சி வரும்!"**

எவரிடமும் எளிதாக நெருங்கிப்பழகும் இனிய சுபாவத்தைப் பெற்ற மிதுன ராசி நேயர்களே!

எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் இயல்பாகவே உங்களுக்கு இருக்கும். அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்களும் நீங்கள்தான். கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டு புகழ்பெற்றவர்களின் நட்பைப் பெறமுயற்சிப்பவர்களும் நீங்கள்தான்.

உங்கள் ராசிக்கு அதிபதியான புதன் 'வித்யாகாரகன்' என்று அழைக்கப்படுகிறார். அதனால்தான் கற்ற கல்வியை விடப் பெற்ற அனுபவங்கள் உங்களுக்கு அதிகமாக இருக்கும். எண்ணற்ற நண்பர்களின் மனதில் இடம்பிடித்த உங்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி எப்படி இருக்கப் போகிறது என்ற சிந்தனை மேலோங்கி இருக்கும்.

குருவின் வீடான மீன ராசியில் தான் உங்கள் ராசி நாதன் புதன் நீச்சம் பெறுகிறார். எனவே, மீன ராசியில் இடம்பெற்றுள்ள நட்சத்திரங்களில் ஒன்றான ரேவதி நட்சத்திரம் ஞாயிற்றுக்கிழமைகளில் வரும்பொழுது, நீங்கள் செய்யும் குரு வழிபாடு மகத்தான பலன்களைத் தரும். அன்றைய தினம் குரு ப்ரீத்தி செய்வதோடு, குருவிற்காக நடைபெறும் யாகங்களிலும் கலந்து கொண்டால், குறைகள் அகலும். குழப்பங்கள் தீரும்.

### வருமானங்களைத் தரும் குருப்பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் ராசிக்கு, இதுவரை பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 08.05.2011 முதல் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும்.

சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள். உறவுகளில் இருந்த பகை நீங்கும். அதன் ஆதிபத்யம் மற்றும் சுயஜாதக அடிப்படையில் குருவின் பலமறிந்து செயல்பட்டால், தினந்தோறும் திருநாளாக மாறும்.

குரு உங்கள் ராசிக்கு 7, 10க்கு அதிபதியாவார். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குருபகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, மனைவி, மக்கள் வழியில் உதிரி வருமானங்களும் வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் மட்டும் இல்லாமல் இருந்தால், குருவின் முழுமையான பலன் உங்களுக்கு கிடைத்திருக்கும்.

இருப்பினும், குரு பார்க்கும் இடங்களின் மூலம் நல்ல பலன்களை உங்களுக்கு வழங்கும். பார்க்கும் குருவைப் பலப்படுத்த, குருப் பெயர்ச்சி சமயத்தில் குருகவசம் பாடி, வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். 'நாள் செய்வதை நல்லவன் செய்ய மாட்டான்!, கோள் செய்வதை கொடுப்பவன் செய்ய மாட்டான்!' என்பார்கள்.

எனவே, நாளும், கோளும் நலம் தரும் நாட்களில் குருவிற்குரிய சிறப்பு தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம். பாமாலையோடு, பூமாலையும் சாற்றுங்கள். நெஞ்சம் மகிழ மஞ்சள் வண்ண ஆடைகளை அணிவித்து வந்தால், நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

*'மன்னவன் பதினொன்றில்*
*வந்து விட்டால் செல்வம் வரும்!*
*எண்ணியது நிறைவேறும்*
*எழிலான வாழ்வமையும்!*
*அந்நியர்கள் உதவியுடன்*
*அதிசயிக்கத் தொழில் அமையும்!*
*மண்ணுலகில் கடல் தாண்டும்*
*வாய்ப்புகளும் உருவாகும்!'*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

பதினொன்றில் வரும் குருவால் பண மழையில் நனையப் போகிறீர்கள். மதிப்பு, மரியாதைகள் கூடி வரும். மேலும், லாப ஸ்தானத்திற்கு வந்த குருவால், அடிப்படை வசதிகள் உங்களுக்குப் பெருகப் போகிறது. செல்வச் செழிப்பில் திக்குமுக்காடப் போகிறீர்கள். உங்கள் காட்டில் பணமழை பொழிவதைப் பார்த்து பக்கத்து வீட்டார்கள் எல்லாம், 'இவ்வளவு பணம் எப்படி வந்தது?' என்று ஆச்சரியப்படப் போகிறார்கள். கடன் சுமை குறையும். சொத்துக்களை வாங்கிப் பத்திரப் பதிவுகளை மேற்கொள்வீர்கள்.

கட்டிய வீடு கால்வாசியிலேயே நிற்கிறது என்றும், அஸ்திவாரத்துக்குப்பிறகு வளர வில்லையே என்றும் கவலைப்பட்டவர்கள், இனி எதிர்பாராத விதத்தில் பணம் வந்து சேர்ந்ததும் இல்லத்தை கட்டத் தொடங்கி, உள்ளம் மகிழும் விதம் கிரகப்பிரவேசம் செய்ய வழி பிறக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்த இடத்திற்கு இடமாறுதல் பெற்றுச் செல்வர்.

தொழில் புரிவோர் இடமாற்றம், ஊர்மாற்றம் போன்றவற்றை சந்தித்து மகிழ்ச்சி காண்பர். அந்நிய தேசப் பயணம் கூட ஒருசிலருக்கு வந்து சேரலாம். குருவின் அருட்பார்வையால் செல்வம் பெருகும். செல்வாக்கு உயரும். பகை அகலும். பதவி வாய்க்கும். மாலைகளும், வேலைகளும் மகிழ்வோடு தேடி வரும்.

### வெற்றியைத் தரும் வியாழனின் பார்வை!

பதினோராமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களைச் சேர்வதால், சகோதர சகாய ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகியவை புனிதமடைகின்றன. இதன் விளைவாக, நல்ல மாற்றங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். வல்லவர்களாக விளங்குபவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து வளமும், நலமும் காண வைப்பார்கள்.

பொதுவாக, குருவின் பார்வைக்குப் பலன் அதிகம். அதன் அருட்பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் உங்கள் ராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களை இப்பொழுது குரு பார்க்கப் போகிறார். இதன் மூலம் சகோதர வழியில் ஒற்றுமை கூடும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் வீடு வந்து சேர்வர். பணப் புழக்கம் அதிகரிக்கும். தூரதேசத்தில் இருந்து வரும் செய்திகளால் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழிலில் தொல்லை தந்த எதிரிகள் இனி விலகுவர். துணிவுடன் எதையும் சாதிக்கும் வல்லமையைப் பெறுவீர்கள்.

பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைவதால், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் பொன்னான திருமண விழாக்களைக் கண்டு மகிழ்வீர்கள். உங்கள் வாரிசுகள் வளர்ச்சியடைய கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். இருப்பினும், ஜென்மத்தில் கேது அமர்ந்திருப்பதால், உடல்வாகு ஒத்துழைப்பது அரிது. அதன் பெயர்ச்சிக்கு பின்னால் ஓரளவு ஆரோக்கியம் சீராகும்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தால், உங்கள் சந்தோஷங்களுக்கு குறுக்கீடாக உறவினர்களே நிற்கும் சூழ்நிலை உருவாகலாம். பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்களின் பகை அதிகரிக்கும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு 'பொல்லாதவர்கள்' என்ற பெயர் இனி மாறலாம். பயணங்களில் மட்டும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது.

குருவின் ஒன்பதாம் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேர்வர். குடும்ப பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவுக்கு வரும். விருந்தினர்களால் வந்த தொல்லை அகலும். விருப்பப்படியே கல்யாணம் செய்து கொள்ளும் வாய்ப்பு வந்தாலும், கேது பலத்தால் யோசித்து ஏற்றுக் கொள்வது தான் நல்லது.

திருமண வாழ்வில் பிரச்சினைகள் இருப்பவர்கள் யோகபலம் பெற்ற நாட்களில் அதற்குரிய பரிகாரங்களைச் செய்து கொண்டால் ஒற்றுமை மேலோங்கும்.

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இடம் வாங்கும் சூழ்நிலை அமையும் பொழுது, செவ்வாய் பலம் பெற்றவர்களின் பெயர்களில் வாங்குவது நல்லது. வியாழன் தோறும் விரதம் இருந்து, வெற்றி தரும் குருவை வழிபட்டு வந்தால் மற்றவர்கள் போற்றும் வாழ்க்கை அமையும்.

### வளர்ச்சியைக் கூட்டும் வக்ர காலம்!

மேஷ இராசியில் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ரகதியில் இயங்குகிறார். உங்கள் ராசியைப் பொறுத்த வரை 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் குரு, வக்ரம் பெறும்பொழுது வளர்ச்சியையே வரவழைத்துக் கொடுக்கும்.

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற குரு, தனது வக்ரகாலத்தில் அதிர்ஷ்ட வாய்ப்புகள் பலவற்றையும் வரவழைத்துக் கொடுப்பார். மேலும், விலகிச் சென்ற வரன்கள் மீண்டும் வரும். வெளியேறிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும.

தொகை வருவதில் ஏற்பட்ட தடை அகலும். அரசு வழியில் எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைத்து, புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்காலத்திற்காக தீட்டிய திட்டம் இப்பொழுது தான் வெற்றி பெற்றது என்று நண்பர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வக்ர காலத்தில் மேலும் நீங்கள் வளர்ச்சி மீது வளர்ச்சியை வரவழைத்துக்கொள்ள, அக்கறை காட்ட வேண்டியதெல்லாம் ஆலய வழிபாட்டில்தான்.

இந்த குருபெயர்ச்சியால் பணப் புழக்கம் அதிகரிக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். கடன் என்ற மூன்றெழுத்து உங்கள் அகரா

சிவல்புரி சிங்காரம்

தியை விட்டு அகலப் போகிறது. முட்டுக் கட்டைகள் போட்ட மூத்த சகோதரர்களும், இளைய சகோதரர்களும் இனி ஒத்துவருவர். திட்டமிட்டபடியே வரன்கள் வந்து சேரும். தித்திக்கும் விதத்தில் கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். உங்கள் பெயரில் தொழில் தொடங்குவது பற்றி இதுவரை கேட்டபொழுது, யோசித்து வந்த நீங்கள் இனி சரியென்று சொல்லும் அளவிற்கு கிரகங்கள் சாதகமாக உலா வருகின்றன. சுயஜாதகத்தின்படி பரிகாரங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது தான் நல்லது.

லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால், இலாபங்கள் பெருகவும், யோகங்கள் வந்து சேரவும் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபடுவது நல்லது. திசைமாறிய தென்முகக் கடவுளையும் வழிபாடு செய்வது நல்லது. *(தொடரும்)*

# நேட்டோ படையினரின் தாக்குதலில் முவம்மர் கடாபியின் புதல்வர் பலி!!!



நேட்டோ கூட்டுப் படையினர் நடத்திய விமானத் தாக்குதல்களில் லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபின் புதல்வர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடாபியின் கனிஷ்ட புதல்வரான சயிப் அல் அராப் என்பவரே இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதலில் கடாபியின் 3 பேரக் குழந்தைகளும் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

லிபிய தலைநகர் டிரிபோலியில் அமைந்துள்ள பாரிய மாளிகையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி கடாபியும் குறித்த மாளிகையில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விமானத் தாக்குதல்களினால் குறித்த கட்டடம் பாரியளவில் சேதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சயிப் அல் அராப் ஜேர்மனியில் கல்வி கற்று அண்மையில் நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 29 வயதான சயிப் அல் அராப் மற்றும் மூன்று பேரக் குழந்தைகள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக லிபிய அரசாங்கப் பேச்சாளர் மூசா இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தலைவரை படுகொலை செய்யும் நோக்கில் நேட்டோ கூட்டுப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உயிரிழப்புச் சம்பவங்கள் தொடர்பில் சுயாதீனமான தரவுகள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லையெனவும் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சயிப் அல் அராப் லிபிய நாட்டு பொது மகன் எனவும் இவ்வாறான தாக்குதல்களின் மூலம் நேட்டோ படையினர் எவ்வாறு பொது மக்களை பாதுகாக்கின்றனர் என அரசாங்கப் பேச்சாளர் மூசா கேள்வி எழுப்பியுள்ளார்.

சமாதானத்தை விரும்பாத நாடுகளே லிபியா மீது தாக்குதல் நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார். இதேவேளை தாக்குதல் சம்பவம் தொடர்பில் நேட்டோ கூட்டுப் படையினர் எவ்வித கருத்துக்களையும் இதுவரையில் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## பிறப்புச் சான்றிதழை வெளியிட்டார் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் அமெரிக்காவில் பிறந்தவரல்ல என்ற சர்ச்சையை எதிர்க்கட்சிகள் கிளப்பின. வெளிநாட்டில் பிறந்த ஒருவர் அமெரிக்காவின் முறையான ஜனாதிபதியாக இருக்க முடியாது என்றனர். ஆனால் அமெரிக்க மாநிலத்தில் தான் பிறந்ததாக ஒபாமா விளக்கம் அளித்தார். எனினும் இந்த சர்ச்சை ஓயவில்லை. இந்நிலையில் தனது பிறப்பு சான்றிதழை வெள்ளைமாளிகை இணையத்தளத்தில் ஒபாமா வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஹவாய் மாநிலம், ஹனோலுலு என்ற இடத்தில் ஒபாமா பிறந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது. சான்றிதழில் உள்ளாட்சி அதிகாரியும் ஒபாமாவின் தாயும் கையெழுத்திட்டுள்ளனர். இது பற்றி வெள்ளை மாளிகை தகவல் தொடர்பு இயக்குநர் டான் பெய்பர் கூறுகையில், பிறந்த இடம் பற்றி எழுப்பப்படும் சர்ச்சைகள் நாட்டுக்கு நல்லதல்ல என்று ஒபாமா கருதுகிறார் என்றார். (ஸ்ரீ-2)

## சீனாவின் சனத்தொகை 134 கோடி

(பீஜிங்)

சீனாவின் சனத்தொகை 134 கோடி என கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. சீனாவில் 2010ஆம் ஆண்டு இறுதியில் சனத்தொகைக் கணக்கெடுப்பு தொடங்கியது. அதற்கு முன் 2000 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட சமீபத்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி சீனாவில் தற்போதைய சனத்தொகை 134 கோடி. அவர்களில் சுமார் 50 சதவீத மக்கள் நாட்டின் நகரங்களில் வசிக்கின்றனர். 2000ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின் போது இது 36 சதவீதமாக இருந்தது. 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் எண்ணிக்கை இப் போது 3 சதவீதம் அதிகரித்துள்ளது மொத்த சனத்தொகையில் அவர்களது பங்கு 13.3 சதவீதம் ஆகும்.

எனினும் முந்தைய கணக்கெடுப்புகளுடன் ஒப்பிடுகையில், கடந்த 10 ஆண்டுகளில் சனத்தொகை அதிகரிப்பு வேகம் குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. ஒரு குடும்பம் ஒரு குழந்தை என்ற அரசின் கொள்கையே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்ததால் உழைக்கும் வயதினர் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் குறிப்பாகக் கிராமங்களில் வேலைக்கு ஆளின்றி பொருளாதார வளர்ச்சி தடைப்படலாம் என்றும் சனத்தொகைக் கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.

14அல்லது அதற்குக் குறைந்த வயதினர் 16.6 சதவீதம் குறைவு. குழந்தைகளில் 6 ஆணுக்கு 5 பெண் குழந்தைகள் இருப்பதாகவும் பின்னாளில் திருமணம் செய்வதில் பிரச்சினைகள் ஏற்படலாம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சிரியாவில் போராட்டக்காரர்கள் மீது இராணுவம் சூட்டில் 62 பேர் பலி

(வோஷிங்டன்)

சிரியாவில் ஜனாதிபதி பாஷர் அல் ஆசாத் பதவி விலகக்கோரி நாடு முழுவதும் போராட்டம், ஆர்ப்பாட்டம் நடந்து வருகிறது.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் துப்பாக்கியால் சுட்டது. இதில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 62 பேர் பலியானார்கள். டேரா என்ற இடத்தில் மட்டும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதில் 19 பேர் பலியானார்கள். ரஸ்டான், லடாக்கியா, ஹோம்ஸ் ஆகிய நகரங்களில் நடந்த தாக்குதல்களில் 43 பேர் பலியானார்கள். பலியான 62 பேரின் பெயர்களை மனித உரிமைக்குழு வெளியிட்டது.

இதற்கிடையில் ஆசாத்தின் ஒன்றுவிட்ட சகோதரரும் உளவுப்பிரிவு தலைவருமான அடிப் நஜீப் அவரது தம்பி மகர் ஆகியோர் மீது அமெரிக்கா பொருளாதார தடை உத்தரவை பிறப்பித்தது.

இந்த 2 பேரும்தான் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த உத்தரவு பிறப்பித்தவர்கள் என்று கூறப்படுகின்றது. இந்த பொருளாதாரத் தடை காரணமாக அந்த 2 பேரின் பெயரில் அமெரிக்காவில் உள்ள சொத்துக்கள் முடக்கப்பட்டன. அவர்களது தொழில் நிறுவனங்களுடன் அமெரிக்க கம்பனிகள் தொழில் உறவு வைத்து இருக்கவும் கூடாது என்று தடை விதிக்கப்பட்டு உள்ளது. (ஸ்ரீ-2)




## முபாரக்கிற்கு மரணதண்டனை கிடைக்க வாய்ப்பு

(கெய்ரோ)

எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி நடத்தினார்கள். போராட்டம் தொடங்கிய 18 நாளில் முபாரக் பதவி விலகினார். தற்போது அங்கு இராணுவ ஆட்சி நடக்கிறது.

பதவி விலகிய முபாரக் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை ஒடுக்க இராணுவத்தை ஏவி சுட்டுக் கொல்லப்பட்டதாக முபாரக் மீது குற்றச்சாட்டு உள்ளது.

இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் முபாரக்கிற்கு மரண தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது. (ஸ்ரீ)

# போர் நிறுத்தத்துக்கு தயார்; பதவி விலகத் தயாரில்லை

## கடாபி அறிவிப்பு

லிபியா நாட்டு ஜனாதிபதி கடாபி நேற்று முன்தினம் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றியுள்ளார். அப்போது அவர் போர் நிறுத்தம் செய்து கொள்ள தயார் என்றும் ஆனால் அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்றும் நாட்டை விட்டு ஓடும் படி யாரும் என்னை நிர்ப்பந்தம் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டார்.

லிபியா ஜனாதிபதி கடாபி தன் சொந்த நாட்டு மக்கள் மீதே போர் விமானம் குண்டுகளை வீசி அவர்களை கொன்று குவித்ததைத் தொடர்ந்து அந்நாடு மீது மேற்கத்தேய நாடுகளின் இராணுவம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல் மூலம் கடாபியின் ஆட்சியை கவிழ்க்க முடியவில்லை. அதற்கு பதிலாக போர் நீடித்துக் கொண்டே போகிறது.

எதிர்ப்பாளர்கள் மீது இராணுவம் விமானம் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. சில இடங்களில் எதிர்ப்பாளர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே கடும் யுத்தம் நடந்து வருகிறது. இரு தரப்புக்கும் சிக்காமல் வெற்றி தேவதை விலகிச் சென்றபடியே இருக்கிறாள்.

இதனால் கடாபி தன் தொனியை மாற்றிக் கொண்டு சமாதானமாக போகும் எண்ணத்தில் தொலைக்காட்சி சனலில் 80 நிமிடம் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது.

போர் நிறுத்தத்தை நாம் தான் முதலில் வரவேற்றோம். அதை முதலில் ஏற்று செயற்பட்டதும் நாம் தான். ஆனால் நேட்டோ (அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகளின் இராணுவம்) தன் தாக்குதலை நிறுத்தவில்லை. அமைதிக்கான கதவு திறந்தே இருக்கிறது. போர் நிறுத்தத்துக்கு நாம் தயாராக இருக்கிறோம்.

பெருமளவிலான அப்பாவி மக்களைக் கொன்று குவித்ததாக கூறுவது தவறு. அப்படி கொன்று குவித்ததற்கான ஆதாரத்தை நேட்டோ கொடுக்க முடியுமா? நாம் நேட்டோ மீது தாக்குதல் நடத்தவில்லை. நாம் கடல் தாண்டவில்லை. அவர்கள் ஏன் நம்மை தாக்கி வருகிறார்கள். வாருங்கள் பேச்சு வார்த்தை நடத்துவோம்.

நான் பதவி விலகமாட்டேன். என் நாட்டை விட்டு வெளியேற மாட்டேன். என் நாட்டை விட்டு வெளியேறும் படி யாரும் என்னை கட்டாயப்படுத்த முடியாது. என் நாட்டுக்காக நான் போரிடக்கூடாது என்று யாரும் என்னிடம் சொல்ல முடியாது என்றார் கடாபி.

அவர் தொலைக்காட்சி ஸ்டுடியோவில் பேசிக்கொண்டிருந்த போது நேட்டோ விமானங்கள் அந்த தொலைக்காட்சி சனல் கட்டடம் அருகே உள்ள 3 இலக்குகள் மீது குண்டுகளை வீசின. இப்படி குண்டுகள் வீசியதற்கு காரணம் கடாபியை கொல்வதற்கான நடவடிக்கை தான் என்று லிபிய ஊடகங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

# வடக்கு மக்களின் தேவைகள் தொடர்பில் அமைச்சர் பசில் வெளிநாடுகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

வடக்கு மக்களின் மனிதாபிமான தேவைகள் தொடர்பில் வெளிநாடுகளுக்கான இலங்கை இராஜதந்திரிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

முக்கிய நாடுகளுக்கான தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு இவ்வாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியிலும் மக்களின் தேவைகள் மற்றும் அந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் சிரத்தை என்பன தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லிக்கு உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவம்சம், பாரிசிற்கான தூதுவர் தயான் ஜயதிலக்க, ஐக்கிய நாடுகளின் ஜெனீவாவிற்கான பிரதிநிதி கனுஷ்கா செனவிரட்ன, ஐக்கிய நாடுகளின் நியூயோர்க்கிற்கான பிரதிநிதி பாலிதகோஹணே மற்றும் பிரசல்ஸிற்கான தூதுவர் ரிவன்த ஆரியசிங்க ஆகியோருக்கு இவ்வாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இராஜதந்திரிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் குறிப்பிட்ட நாடுகள் மற்றும் அமைப்புக்களில் இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் உதவிகளின் அவசியங்களை வலியுறுத்தும் நோக்கில் இந்த விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான விடயங்களை அரசாங்கம் எவ்வாறு மேற்கொண்டது என்பது தொடர்பில் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வரு வதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், பொது மக்கள் சேத விபரங்கள், காணாமல்போனோர் பற்றிய விபரங்கள், சட்டச் சிக்கல்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தனியான அறிக்கையொன்றை தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் இவ்வாறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் அரசடி அருள்மிகு செல்லப்பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவத்தில் இன்று திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பூங்காவனத்திருவிழாவும் நாளை மறுதினம் புதன்கிழமை வைரவசாந்தியும் இடம் பெறும். (ஸ்ரீ-2)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யா/ வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை வசந்த மண்டப பூஜையுடன் சுவாமி வீதிவலம்வருவார்.

(ஸ்ரீ-2)

# நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக உண்ணாவிரதம் ஆரம்பிக்கவில்லையா?

## அமைச்சர் விமலுக்கு ஜனாதிபதி கிண்டல்

(கொழும்பு)

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக உண்ணாவிரதமொன்றை ஆரம்பிக்கவில்லையா என்று அமைச்சர் விமல்வீரவன்சவிடம் ஜனாதிபதி கிண்டலாக வினாத் தொடுத்துள்ளார்.

அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் செயற்குழுக்கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. அதில் பிரதம பேச்சாளராக கட்சியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச உரையாற்றியுள்ளார்.

அதன்போது ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையை தாருஸ்மான் குழு அறிக்கை அடையாளப்படுத்த அரசாங்கம் எடுத்த முடிவை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். அரசாங்கத்தின் பங்காளிகள் என்ற வகையில் எங்களைக் கேட்காமல் அரசாங்கம் எந்த முடிவையும் எடுப்பது தவறு என்ற வகையில் அவர் காரசாரமாக விமர்சித்துள்ளார்.

அமைச்சரின் உரை முடிவுற்றவுடன் அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்துள்ளது. மறுபுறத்தில் ஜனாதிபதி கடும் கோபத்துடன் கத்திப் பேசியுள்ளார். நீ எப்படி எங்கள் முடிவுகளை விமர்சனம் செய்யலாம் என்ற கேள்வியே ஜனாதிபதியின் பேச்சிற்கு சாராம்சமாக இருந்துள்ளது.

தான் பேசி முடிப்பதற்குள் ஜனாதிபதிக்கு எப்படி செய்தி போனது என்ற திகைப்பில் அமைச்சர் விமல் வீரவன்ச வாயடைத்துப் போன காரணத்தினால் பதிலே பேசவில்லையாம்.

கடைசியாக தொலைபேசி அழைப்பைத் துண்டிக்கும் போது என்னப்பா நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இம்முறை உண்ணாவிரதம் ஏதும் இருக்கவில்லையா? என்று ஜனாதிபதி அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கிண்டலாக கேள்வியொன்றை தொடுத்துள்ளார். அமைச்சர் முகத்தில் ஈயாடவில்லையாம். (ஸ்ரீ-2)

# உண்ணாவிரதமிருக்கும் மகனை விடுவிக்குமாறு கைதியின் தாய் நீதியமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதியின் தாயார் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். கடந்த 25 ஆம் திகதி முதல் குறித்த தமிழ் அரசியல் கைதி தனது விடுதலையை வலியுறுத்தி இந்தச் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்யவோ அல்லது பிணையில் செல்ல அனுமதிக்கவோ நடவடிக்கை எடுப்பதாக பிரதம நீதியரசர் கூறியதை தாம் மனமார வரவேற்பதாக குறித்த கைதியின் தாய் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இது வெறும் வாய் வார்த்தையாக மாத்திரம் இருக்காது. உடனடியாக தனது மகனை விடுவிக்குமாறு நீதியமைச்சரிடம் அவர் அக்கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் ஜே.வி.பியின் கோரிக்கை நிராகரிப்பு

ஐக்கிய நாடுகள்நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ஜே.வி.பி விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடாத்தப்படவேண்டுமென ஜே.வி.பி, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தில் கட்சித் தலைவர்களுக்கு இடையில் நடைபெற்ற கூட்டத்தின் போது ஜே.வி. பி. இந்த யோசனைத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

இவ்வாறு விவாதங்கள் அவசியமற்றது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. ஜே.வி.பி.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எவ்வாறெனினும் இந்த யோசனைத் திட்டத்திற்கு ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


# நன்றி கலந்த வாழ்த்துக்கள்





ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய 2010 ஆம் ஆண்டிற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சம்பியன்கிண்ணத்தை தனதாக்கிய பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அணியை கொழும்பில் சந்தித்து வாழ்த்து தெரிவித்த ஸ்ரீலங்கா சோசலியக் குடியரசின் ஜனாதிபதி **அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ** அவர்களுக்கும் பிரயாண ஒழுங்குகளையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் **மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் பிரயாணத்திற்கான தொடர்புகளை ஏற்படுத்தித் தந்த ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சர்வதேச பிரமுகர் **திரு.சி.விந்தன்** அவர்களுக்கும் வடமராட்சி அமைப்பாளர் **திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்** அவர்களுக்கும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது உளப்பூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.



**செயற்குழு**

**பருத்தித்துறை**
**உதைபந்தாட்ட லீக்**



(சி-3110)



## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) C9 (வீதி வேலைக்கு) ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.


1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 04.05.2011-11.05.2011 பி.ப 02.00 மணிவரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:-12.05.2011 நண்பகல் 2.00 மணிவரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 13.05.2011 மு.ப 10.00 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தபால் உறையில் ஒட்டி பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரியிட்டு தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 12.05.2011 நண்பகல் 02.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக இடப்படல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

| இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
| --- | --- | --- | --- |
| 01 | யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உள்ளகப் பிரதான வீதியும், உள்ளக உப வீதியும் அமைத்தல். | 10,000.00 | 1,000.00 |

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி-3109)

# எது புனிதத்தலம்?



## ஆன்மீகம் 06

**கேள்வி:** நான் ஆசிரமத்திற்கு அருகிலுள்ள 'மஹா முத்ரா' ஹோட்டலைத்தாண்டி சிறிது தூரம் அடிக்கடி நடந்து போய்வருகிறேன். அப்போதெல்லாம் நான் ஆசிரமத்தை விட்டு வெளியே காலெடுத்து வைக்கும் போதே, மிகுந்த சக்தி வேறுபாட்டை என்னால் உணர முடிகிறது. நான் அமெரிக்காவிற்கு திரும்பிப் போகும் போது என்ன நடக்கும் என மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இந்த சக்திநிலை வேறுபாட்டைப் பற்றியும் ஏன் அப்படி நிகழ்கின்றது என்பது பற்றியும் கூறமுடியுமா? ஆசிரமத்தில் வேலை செய்யும் கட்டடத் தொழிலாளிகளும், ஏன் தெருநாய்களும்கூட இந்த சக்திநிலையால் பயனடைவார்கள் என்று முன்பொருமுறை கூறியிருக்கிறீர்கள். இதுபற்றி மேலும் விளக்கமுடியுமா?

**சத்குரு:** என்ன, 'மஹாமுத்ரா' ஹோட்டலைத் தாண்டி வாக்கிங் போகிறீர்களா? வாக்கிங் போவதற்கான இடம் அதுவல்ல என நினைக்கிறேன். அமெரிக்கா என்ன, இங்கு உருவாக்கப்பட்டுள்ள சக்திநிலையை நீங்கள் செவ்வாய்க்கிரகத்திற்குக் கூட எடுத்துப்போக முடியும். ஆனால் 'மஹா முத்ராவுக்கு' எடுத்துப்போக முடியாது. நீங்கள் ஆசிரமத்திலிருந்து ஒரு இடைவெளியை விரும்புவதால்தான் 'மஹா முத்ரா' ஹோட்டலுக்குச் செல்கிறீர்கள். உங்கள் நோக்கமே இந்த இடத்திலிருந்து போவதுதான். அதனால்தான் 'மஹா முத்ரா' விற்குப் போகிறீர்கள். நீங்கள் இந்த சக்தியை செவ்வாய்க் கிரகத்திற்குக்கூட எடுத்துப்போக முடியும். ஆனால், 'மஹா முத்ரா'வுக்கு எடுத்துப்போக முடியாது. அதனுடைய அழகே அதுதான். எனவே, இங்கு என்ன நடக்கிறதோ - இந்த சக்தி, இந்த இடத்தின் தன்மை, இந்த ஆதரவு- அவற்றை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். ஆனால், மஹாமுத்ராவுக்கு எடுத்துப்போக முடிய்ாது. அந்த இடத்தில் தவறு ஏதும் இல்லை. ஆனால், நீங்கள் அங்கு போவது இங்கிருந்து தப்பிக்க விரும்புவதால்தான். நீங்கள் தப்பிக்க விரும்பினால் தப்பித்துக்கொள்ளுங்கள். நீங்கள் தப்பிப்பது எதிலிருந்து என்றால் உங்களுக்குள் உள்ள சாத்தியத்திலிருந்தே தப்பிக்கிறீர்கள். நீங்கள் அதிலிருந்து தப்பிப்பீர்கள்; சுய தோல்விக்கான திட்டங்களையும் உண்டாக்கிக் கொள்வீர்கள். முழுஉலகமும் அதில் மும்முரமாக இருக்கிறது.

இப்படி ஏன் சொல்கிறேன் என் றால் உலகில் மக்கள் இறக்கும் விதத்தைப் பாருங்கள். மக்கள் இறக்கும்போது நீங்கள் அருகில் இருந்து பார்த்தால் 90 சதவீத மக்கள், அல்லது அதற்கும் அதிகமானவர்கள், கடைசிநேரத்தில் பயத்தில் இறப்பார்கள்; என்ன நடக்கிறது என்றே தெரியாமல் இறப்பார்கள்; தங்கள் உயிர்த்தன்மையின் மீது எந்தக் கட்டுப்பாடும் இன்றி இறப்பார்கள்; கடைசி நேரத்தில் சிறுநீர்கழித்து இறப்பார்கள்; மலம்கழித்து இறப்பார்கள். இவை சாதாரண உடல் சம்பந்தமான செயல்கள் மட்டுமல்ல. உங்களுக்குள் நீங்கள் எந்த அளவு நிலை பெற்றிருக்கிறீர்கள், உயிர்த்தன்மையின் செயல்முறைகளில் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் அது வெளிப்படுத்துகிறது. நீங்கள் சுய அழிவில் இருக்கிறீர்களா அல்லது உயிர்த்தன்மையின் செயல்முறைகளில் ஏதாவது செய்திருக்கிறீர்களா என்பதையெல்லாம் உங்கள் இறப்பின் கடைசிநேரம் தெளிவாக வெளிப் படுத்துகிறது. வாழ்க்கை முழுவதும் நீங்கள் நடிக்கலாம், ஆனால் இறக்கும் கணத்தில் நீங்கள் நடிக்க முடியாது. நீங்கள் யாரென்பதை இறப்பு சரியாகத் தெரிவித்துவிடும்.

எனவே அதைக்கண்டு பிடிப்பதற்காக இறக்கும்வரை காத்திருக்கப்போகிறீர்களா? அந்த முடிவு உங்கள் கையில் இருக்கிறது. ஆனால், நீங்கள் அறிவுடன் செயற்படுப வராக இருந்தால், உங்களைக் குறித்து இப்போதே நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும். உங்கள் உச்சபட்ச நலனுக்கான வழிகளைத் தவிர்க்க நினைத்தால் நிச்சயமாக நீங்கள் உங்களையே அழித்துக் கொள்கிறீர்கள் இல்லையா? உங்கள் உச்சபட்ச நலனைத்தவிர்க்க நினைத்தாலோ அல்லது அதிலிருந்து இடைவெளி எடுக்க நினைத்தாலும் கூட உங்களை நீங்களே அழித்துக் கொள்கிறீர்கள். எதற்காக அந்தப் பக்கம் வாக்கிங் போகிறீர்கள்? வேறு விதமான உணவை விரும்புகிறீர்கள் என்றால் அதுவேறு. புதிய காற்றை சுவாசிக்க விரும்புகிறீர்கள் என்றால் அதுவேறு. சிறிது உடற்பயிற்சி பெற விரும்புகிறீர்கள், அது வேறு விடயம். ஆனால், சூழ்நிலையிலிருந்து தப்பிக்க நினைக்கிறீர்கள், எனவே அது மிகவும்வேறு வகையானது. எனவேதான் கூறினேன், இந்தச் சக்தியை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். ஆனால், 'மஹா முத்ரா'வுக்கு எடுத்துப்போக முடியாதென்று.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(தொடரும்)

# இலங்கையில் ஊடகவியல் கல்விப் போக்கும் நோக்கும்

05

**உலக ஊடகவியல்கல்வி:...**

தகவல் தொடர்பியல் கல்வியில் தொடக்ககாலத்தில் போல் லாசர் பெல்ட் (Paul Lazars Feld), குர்த் லெவின்(Kurt Lewin), ஹரோல்ட் லாஸ்வெல்(Hurold Lasswell), கார்ல் ஹொவ்லாண்ட்(Carl Hoveland), போன்றோர் பெரிதும் ஆர்வம் காட்டிவந்தனர். இவர்கள் தகவல் தொடர்பு குறித்து ஆய்வகளையும் செய்தனர்.

இரண்டாம் உலகப்போர். நிகழ்ந்த காலகட்டத்தில் தகவல் தொடர்பியல் சிறந்ததொரு துறையாக உருவெடுத்தது. இது தொடர்பான கல்வி முறையிலும் இக்காலப்பகுதியில் பலர் ஈடுபடத் தொடங்கினர்.

19ஆம் நூற்றாண்டில் சார்ல்ஸ் டார்வின் (Charles Darwin), சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud), கார்ல் மார்க்ஸ்(Karl Marx), ஆகியோரின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தகவல் தொடர்பியல் துறையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. 20 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்தான் தகவல் தொடர்பியல்துறை முழுமையாக வளர்ச்சி பெற்ற துறையாக பரிணமித்தது. இக்காலகட்டத்தில் உல கின் பல நாடுகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் தகவல் தொடர்பியல் பற்றிய ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

இந்நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவில் தகவல்த் தொடர்பியல் கற்கைத்துறை இல்லாத பல்கலைக்கழகங்கள் இல்லையென்னும் அளவுக்கு தகவற்றொடர்பியலின் வளர்ச்சி காணப்பட்டது.

அதேபோன்று பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து போன்ற பிறநாடுகளிலும் ஊடகக் கலையின் வளர்ச்சியால் தகவல் தொடர்பியல் கல்வி சிறப்பிடம் பெற்றது.

இந்தியாவிலும் 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் அந்நாட்டின் பல பல்கலைக்கழகங் களிலும்

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

பிற கல்வி நிலையங்களிலும் ஊடகக் கலையின் அதிவேக வளர்ச் சியால் தகவல் தொடர்பியல் கல்வி சிறப்பிடம் பெற்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இதன் வளர்ச்சிநிலை மிகவும் பின் தங்கியதாகவே காணப்படுகிறது. ஆனாலும் சிங்கள மொழியில் சமீப காலங்களில் துரிதமான வளர்ச்சிநிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு ஊடகவியல் தொடர்பான கல்வி முறை முக்கியமான பங்களிப்பை வழங்கிவருகிறது.

ஊடகப்பணியில் ஈடுபடுகின்ற அனைவரும் ஊடகவியல் தொடர்பான அறிவினைப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் தொடர்பு சாதனத்துறையானது தனித்திறமும் பயிற்சியும் தேவைப்படும் தொழில் துறையாகிவிட்டது. எந்தவொரு துறையும் திறம்பட அமையவேண்டும் அல்லது செயற்பட வேண்டுமானால் துறை சார்ந்த செயற்பாடும் தேவைப்படுவதோடு சிறப்பாகப் பணிபுரிய விரும்புவோர் தத்தமது ஆற்றல்களை உரியவாறு வளர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

அனுபவ அறிவுகளோடு செயற்படுவதற்கு அப்பால் படிப்பறிவோடும் பயிற்சியோடும் செயற்படப் புறப்படும் போது அதிக முன்னேற்றத்தை அடையலாம். ஏனெனில் சகல திறன்களும் படிப்பறிவு அல்லது கற்றுக்கொள்வதன் மூலமாகத்தான் வளர்கிறது. சரிவரக் கற்றுக்கொள்ளாமல் எதையுமே சரிவரச் செய்யமுடியாது.

தகவல்தொடர்பு ஊடகக் கலாசாரத்தை ஆழமாகவும் நிதானமாகவும் உலகளாவிய ரீதியில் உருவாக்க படிப்பறிவு அவசியம். அதனால் தொடர்பு சாதனத்துறையினர் இது தொடர்பான கல்வி, பயில்திறம், செயற்றிறன், பயிற்சி, தொழிலாளுமை போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைய யுகத்தில் மனித செயற்பாடுகள் ஊடகங்களின் வழியாகவே முன்னேற்றம் அடைகின்றது. இது தமிழுக்கும் பொருந்தும். இதனைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுடைய "இன்று தமிழின் வியாப்தி ஊடகங்கள் வழியாகவே நிகழ்கின்றது". என்ற கூற்று மெய்த்துரைக்கின்றது.


**இலங்கையின் ஊடகக் கல்வி**

பல்கலைக்கழகம் மற்றும் சில தனியார் நிறுவனங்களினூடாக ஊடகக் கல்வி இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவை பட்டயம், பட்டம், முது நிலைக் கற்கைகள் எனப்பல நிலைகளில் கற்பிக்கப்படுகின்றன. அதுதொடர்பாக சுருக்கமாகப் பார்ப்போம்.

**எஸ். மோசேஸ்**

கொழும்பு பல்கலைக்கழகம் கலைப்பீடத்தின் சிங்கள மொழித்துறையின் ஊடாக கடந்த பத்துவருடங்களுக்கும் மேலாக தமிழ், சிங்களம், ஆங்கிலம், அகிய மூன்று மொழிகளின் மூலமும் தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கென ஒரு வருடகால பட்டயக் கல்வியை மேற்கொண்டுவருகிறது.

(தொடரும்)







வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் புவியியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது. இதில் வட மாகாண கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.செல்வன் ஆரம்பவுரையாற்றுவதையும் வளவாளராகக் கலந்துகொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் கே. சுதாகரன் விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வீதி விளக்குகள் ஒளிராமையால் மக்கள் பெரும் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி மயானச் சந்தியிலிருந்து வில்லூன்றி பிள்ளையார் கோவிலடி வரையான பகுதி வீதி விளக்குகள் ஒளிராமையால் இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

கடந்த 2 வருட காலமாக இவ் வீதியில் வீதிவிளக்குகள் ஒளிர்வதில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இரவில் வீடுகளுக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவசர தேவைகளுக்குக்கூட வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் அப்பகுதியில் விஷமிகள் சிலர் மதுபோதையில் அட்டகாசம் புரிகின்றனர். இதனால் பொது மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது.

தொழிநுட்பம் வெகுவேகமாக வளர்ச்சியடைந்துள்ள இக்கால கட்டத்தில் இத்தகைய வசதிகள் கூட இல்லாமையானது பெரும் துரதிர்ஷ்டம் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் வீதி விளக்குகளை ஒளிரச் செய்து ஒளிமயமான வாழ்வுக்கு உதவுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ)

# பச்சிலைப்பள்ளி மேற்கில் மீள்குடியமர அனுமதிக்கப்படாததால் 6000 பேர் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி மேற்கு பகுதியில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சுமார் ஆறாயிரம் பேர் இன்னமும் தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர முடியாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பல தரப்பினரிடம் முறையிட்டும் தமக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்று அவர்கள் முறையிட்டுள்ளனர்.

இதுகுறித்து பச்சிலைப்பள்ளி மேற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒன்றியத்தைச் சேர்ந்த வேலன் சுப்பிரமணியம் கூறுகையில்,

ஏனைய பல இடங்களில் நிலக்கண்ணிகள் அகற்றும் பணிகள் முடிந்து விட்ட போதிலும் தமது பகுதி மாத்திரம் தாமதத்துக்கு உள்ளாகியிருப்பதால் கிளாலி, முகமாலை, இத்தாவில், வேம்படுகேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உறவினர்களின் வீடுகளிலும் அதிக வாடகை கொடுத்தும் தம்மில் பலர் இன்னமும் தங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

உண்மையில் அங்கு எவ்வித தாமதமும்கிடையாதுஎன்றும்ஆனால் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் அங்கு இன்னமும் பூர்த்தியாக வில்லை என்றும் பதிலளித்தார். (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை திருநகர் மாதா கோவிலடி யிலும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை சொலமன் வீதியிலும் வைத்து இத்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய் களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.05 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1568- ஸ்கொட்லாந்தில் லொக் லெவென் அரண்மனையில் சிறை வைக் கப்பட்டிருந்த முதலாம் மேரி அங்கிருந்து தப்பி வெளியேறினாள்.

★ 1808- மாட்ரிட் மக்கள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

★ 1814- முதலாவது மெதடிஸ்த ஆயர் தோமஸ் கோக் தமது மதத்தைப் பரப்புவதற்காக கப்பலில் இங்கிலாந்தில் இருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.

★ 1876- பல்கேரியாவில் ஏப்ரல் கிளர்ச்சி ஆரம்பித்தது.

★ 1885- புல்ஜிய மன்னர் இரண்டாம் .லெயொ போல்ட் கொங்கோ சுதந்திர நாட்டை அமைத்தான்.

★ 1889- எதியோப்பியாவின் அரசன் இரண்டாம் மெனெலிக் என்பவன் இத்தாலியுடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையின் படி எரித்திரியாவின் முழுப்பகுதியும் இத்தாலிக்கு தரப்பட்டது.

★ 1928- அமெரிக்காவின் பிரபல கேலிச்சித்திர ஓவியரான வோல்ட் டிஸ்னி பிரபல கேலிச்சித்திரக் கதாபாத்திரமான மிக்கி எலியின் படத்தினை வரைந்தார்.

★ 1933- ஹிட்லர் தொழிற்சங்கங்களை தடை செய்தார்.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: பேர்லினைத் தாம் கைப்பற்றியதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது. ஜேர்மனியப் படைகள் இத்தாலியில் சரணடைந்தனர்.

★ 1952- உலகின் முதலாவது ஜெட் விமானம், டி ஹாவிலண்ட் கொமெட் 1, முதற்தடவையாக லண்டனுக்கும் ஜொகான்னஸ்பேர்க் நகருக்கும் இடையில் பறந்தது.

★ 1964- வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கக் கப்பல் ஒன்று குண்டு வெடிப்பில் மூழ்கியது.

★ 1964- 8ஆயிரத்து27 மீற்றர் உயர ஷிஷபங் குமா மலையின் உச்சியை சீனாவின் இரு மலையேறிகள் எட்டினர்.

★ 1982- போக்லாந்து போர்: பிரித்தானியாவின் எச்.எம்.எஸ்.கொன்கரர் என்ற நீர்மூழ்கிக் கப்பல் ஆர்ஜென்டீனாவின் போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.

★ 2002- கேரளாவில் பாலக்காடு நகரில் இடம்பெற்ற கலவரங்களில் 8 இந்துக்கள் கொல்லப்பட்டனர்.

★ 2004- நைஜீரியாவில் 630 முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களால் கொல்லப்பட்டனர்.

★ 2006- குஜராத் மாவட்டத்தில் மசூதி ஒன்று இடிக்கப்பட்டதை அடுத்து இடம்பெற்ற கலகத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2009- வல்லிபுரக்குறிச்சி மருதடி தான்தோன்றீஸ்வரர் தேர்.

**பிறப்புக்கள்**

★ 1921- சத்யஜித் ராய், இந்தியத் திரைப்பட இயக்குநர் (இ.1992)

★ 1969- பிறயன் லாறா, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாளர்.

★ 1975- டேவிட் பெக்காம், இங்கிலாந்து கால்பந்து ஆட்டக்காரர்.

★ 1983- ஈழநிலா, ஈழத்துக் கவிஞர்.

**இறப்புக்கள்**

★ 1519- லியனார்டோ டாவின்சி, இத்தாலிய ஓவியர் (பி.1452)

★ 2009- கே. பாலாஜி ,தமிழ்த் திரைப்பட நடிகர், தயாரிப்பாளர்

**சிறப்பு நாள்**

★ போலந்து-கொடி நாள்

★ ஈரான்- ஆசிரியர் நாள்

★ இந்தோனேசியா- தேசிய கல்வி நாள்

# வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஐநூறு முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுதலை

(கொழும்பு)

அரசிடம் தஞ்சமடைந்தவர்களில் எஞ்சியுள்ள 4 ஆயிரத்து 092 முன்னாள் புலி உறுப்பினர்களும் இந்த வருட முடிவுக்குள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக வாழ்வில் இணைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்களில் சுமார் 500 பேர் எதிர்வரும் வெசாக் பண்டிகையின் போது விடுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 11 ஆயிரத்து 898 முன்னாள் புலி உறுப் பினர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 6 ஆயிரத்து 528 பேர் இதுவரையில் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக வாழ்வில் இணைக்கப்பட்டுள்ளனர். எஞ்சியவர்களுக்கு 9 புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது.

அனைவரையும் ஒன்றாக சமூக வாழ்வில் இணைக்கமுடியாது. கட்டம் கட்டமாகவே அவ்வாறு செய்ய முடியும். இவர்களின் புனர்வாழ்வுக்கு மேலதிகமாக தொழிற்பயிற்சி மற்றும் அறிவூட்டல்கள் என்பன வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சரியான முறையில் புனர்வாழ்வு வழங்கப்படாவிடின் அதனால் எதுவித பயனும் ஏற்படாது. இவர்களை நல்ல மனிதர்களாகவே சமூகத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இதன்படி திருமணமாகி பிள்ளைகள் உள்ள 400 இற்கும் அதிகமானவர்கள் அண்மையில் சமூகத்தில் இணைக்கப்பட்டனர். புனர்வாழ்வு பெற்றவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரம் பேருக்கு சுயதொழில் கடன் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இவர்களுக்கு சுயதொழில் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுதவிர 500 பேருக்கு வீடு கட்டிக் கொள்ள நிதி உதவி வழங்கவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

புனர்வாழ்வு அளிக்கப்படும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு தமது உறவினர்களையும் பெற்றோர்களையும் சந்திக்கவும் அவகாசம் வழங்கப்படுகிறது. அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் வழிகாட்டலின் கீழ் புனர்வாழ்வு அளிக்கும் செயற்பாடு வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத காயா ரோகணேஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பஞ்சரத பவனியும் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஆனந்த நடராஜ மூர்த்தி தீர்த்தோற்சவமும் திருவுலா நடனக் காட்சியும் நடைபெற்று தொடர்ந்து பஞ்ச மூர்த்திகள் தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஸ்ரீ)

### நிபுணர்குழு அறிக்கைக்கு ஆதரவளித்ததன் எதிரொலி

## த.தே.கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளிலிருந்து அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க விலகல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளிலிருந்து முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான ரட்ணசிறி விக்ரமநாயக்க விலகிக் கொண்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் படையினர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் இதனை ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


எனவே தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கப் போவதில்லை.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்பிற்கு அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தலைமை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவின் வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் காரசாரமான விவாதம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## த.தே.கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் தொடரும்

### அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணும் நோக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் அறிக்கையின் மூலம் பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார். நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்திய போதிலும் அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கை விவகாரத்தை சிக்கலாக்காதீர்கள்! சர்வதேச சமூகத்திடம் சீனா வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை விவகாரங்களில் சர்வதேச சமூகம் தேவையின்றி தலையீடு செய்யக் கூடாது என சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தம் தொடர்பான பிரச்சினைகளுக்கு இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் தீர்வு பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹொங் லீ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சகல பிரச்சினைகளுக்கும் இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் சரியான முறையில் தீர்வு காண்பார்கள் என சீனா நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் காத்திரமான ஒத்துழைப்பு வழங்கும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையை மேலும் குழப்பும் வகையிலான செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்கப்படக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரமாண்ட மேதின விழா இன்று

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மே தின விழா இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மாநகர சபை முன்றலில் மிகவும் பிரமாண்டமான வகையில் 16 அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் இணைந்து இம் மேதின விழாவை நடாத்தவுள்ளது.

கொழும்பு கெம்பல் பார்க், ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, மாளிகாகந்த ஆகிய பகுதிகளிலிருந்து பல கட்சிகளினது மே தின ஊர்வலங்கள் நண்பகல் 1 மணிக்கு ஆரம்பமாவதுடன் அவ் ஊர்வலங்கள் கொழும்பு நகர மண்டபத்தை அடைந்ததும் பிற்பகல் 4 மணிக்கு மே தின விழா ஆரம்பமாகும்.

கடந்த சுமார் 25 வருடங்களுக்குப் பின்னர் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் மக்கள் சுதந்திரமாகக் கலந்து கொள்ளும் மே தினம் என்பதால் இம்முறை மேதினம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகிறது.

தொழிலாளர் வர்க்கத்திற்கு அதிக நன்மைகளையும் சலுகைகளையும் வழங்கிய அரசாங்கம் என்ற வகையில் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டுமன்றி சர்வதேச சூழ்ச்சிகளிலிருந்து அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்தின் பலத்தை வெளிக்காட்டும் வகையிலும் இம்முறை மேதின விழா அமையும் என தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)


## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய நவரட்ணராஜாவிற்கான பிரிவுபசார விழாவின் போது கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயன் விருது வழங்கிச் சிறப்பிப்பதைப் படத்தில் காணலாம்.

# பூந்தமல்லி முகாமிலுள்ள இலங்கை அகதிகளை வேறுமுகாமுக்கு மாற்றுமாறு மனுத்தாக்கல்

(சென்னை)

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டம் பூந்த மல்லி முகாமை மூடி அங்குள்ள இலங்கை அகதிகளை தமிழ் நாட்டிலுள்ள ஏனைய முகாம்களுக்கு மாற்றுமாறு சென்னை உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பூந்தமல்லி முகாமில் இருக்கும் இலங்கை அகதியான மூர்த்தி என்றழைக் கப்படும் கங்காதரன் இந்த மனுவை சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய் துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த முகாமில் உள்ள கைதிகள் மற் றும் அக்திகளுக்கு எதிராக சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் சென்னை உயர்நீதிமன்றத்திடம் கோரப் பட்டுள்ளது.

தாம் ஏற்கனவே செங்கல்பட்டு முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் அங்கு நிலவிய குறைபாடுகளை சுட்டிக் காட்டும் வகையில் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இதன் போது நடத்தப்பட்ட தடியடிப் பிர யோகத்தில் முகாமில் இருந்தவர்கள் கடும் காயுங்களுக்குள்ளானதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் அவர்கள் பூந்தமல்லி முகாமிற்கு மாற்றப்பட்டதாகவும் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய் யப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய 19 இலங்கை அகதிகள் தற்போது பூந்தமல்லி முகாமில் தங்கவைக் கப்பட்டுள்ளதாக அச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பூந்தமல்லி முகாம் செங்கல்பட்டு முகா மைவிட மிகவும் குறைந்தளவிலான வசதி களை கொண்டுள்ளதால் தாம் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை அகதிகள் சென்னை உயர் நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள் ளனர்.

இதனை கருத்திற் கொண்டு பூந்த மல்லி முகாமை மூடுமாறும் தம்மை மாநிலத்தில் உள்ள வேறு முகாம்களுக்கு மாற்றுமாறும் தமிழக அரசுக்கு உத்தர விடுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா வில் வடமராட்சியில் அழைக்கப்பட்ட 40 கழகங்களுக்கிடையிலான அணிக்கு 20 இற்கு 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை செவ் வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கரவெட்டிசுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையா ட்டு கழகத்தை எதிர்த்து அல்வாய் பாரதி விளை யாட்டு கழகம் மோதவுள்ளது.

(ஸ்ரீ-3-24)

# இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்

## கனேடிய லிபரல் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை உண்மையான அமைதியை விரும்பினால் அங்கு இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பான விசாரணை களை மேற்கொள்ள வேண்டும்.

நாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளையின் கருத்துடன் உடன்படுகின்றோம். இவ்வாறு கனேடிய லிபரல் கட்சி தெரிவித்துள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கையில் நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் உள்ளதால் முழுமையான விசாரணைகள் தேவையென நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

எனவே இதுவிடயத்தில் நடவடிக்கை எடுக் கப்படுவது அவசியமானது என லிபரல் கட்சியின் மனித உரிமைப் பேச்சாளர் ஜவின் கோட்லா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீண்டகால உள்நாட்டுப்போரில் பல்லாயி ரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரம் மக்கள் காயமடைந்துள்ளனர். இலங்கை மிகவும் மோசமான அழிவுகளைச் சந்தித்துள் ளது. ஆனால் ஐ.நா.வின் அறிக்கையில் அங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த மனித உரிமை மீறல்கள் தொடர் பில் ஆக்கபூர்வமான விசாரணைகள் மேற் கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

லிபரல் கட்சியின் பல்கலாசாரப் பேச்சா ளர் ரெப் ஒலிபன்ற் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் போர் நிறைவடைவதற்கு முன்னரே அங்கு மனிதாபிதமான உதவிகள் அனுப்பப்படவேண்டும் எனவும் இன நல் லிணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் லிபரல் கட்சி கோரிக்கை விடுத்தி ருந்தது.

அகதிகளுக்கான நுழைவு அனுமதி ளையும் அகதிகளை ஏற்றுக்கொள்ளும் வேகத்தையும் அதிகரிக்குமாறு நாம் கன்சர் வேட்டிவ் அரசைக் கேட்டிருந்தோம்.

போரில் இருந்து தப்பியவர்களுக்கு நாம் புதுவாழ்வு அளிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# அமுத சுரபியின் கண்ணீர் அஞ்சலி

மண்ணக வாழ்வு
17 . 04 . 1933

விண்ணக விரைவு
27 . 04 . 2011



அமரர் **குமாரசுவாமி சாந்தலிங்கம்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகாலத் தொண்டரும், கௌரவ செயலாளரும், நயினை பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்கா வலர் சபைத் தலைவரும், தலைசிறந்த தமிழறிஞரும் முன்னாள் நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய அதிபரும், அமுத சுரபி அறநெறிப் பாடசாலை அதிபரும், தலைசிறந்த சமய சமூகத் தொண்டருமாகிய ஸ்ரீமான் குமாரசுவாமி சாந்தலிங்கம் அவர் களின் மறைவையொட்டி எமது நிர்வாகம் கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்குகின்றது. அமரரின் ஆத்ம சாந்திக்காக அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் பாதகமலங்களைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி

பிரதான சாலை,
நயினாதீவு -2.
தொ.பே:- 0213213575
ப.தி.எண். S.236

(சி-319)

நிர்வாகம்
ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை.


# தனியார்துறை ஊழியர்களின் பணத்தை கொள்ளையடிக்க முயற்சி

## சஜித் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஓய்வூதியம் என்ற போர்வையில் அரசாங் கம் ஊழியர்களின் சொத்துக்களை கொள்ளை யிட முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப்பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்குவதாக அறிவித்து அப்பாவி ஊழியர் களின் உழைப்பை சுரண்டுவதற்கு அரசாங் கம் முனைப்பு காட்டிவருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த ஓய்வூதிய திட்டத்திற்காக அரசாங்கம் ஒரு சதத்தையேனும் செலவழிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இது வரையில் அந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை என அவர் தெரிவித் துள்ளார்.

தனியார்துறை ஊழியர்களின் எதிர் காலத்திற்காக சேமிக்கப்படும் பணத்தை கொள்ளையடிக்கும் முயற்சிகளுக்கு இடமளிக் கப்படக் கூடாது என அவர் வலியுறுத்தி யுள்ளார். (ஸ்ரீ-2)




மரம் நடுவோம் நாட்டை வளர்ப்போம் என்ற மஹிந்த சிந்தனைத் திட்டத் திற்கமைவாக கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் உப அதிபர் சி.பாலச்சந்திரன் மாணவி ஒருவருக்கு மரக்கன்று ஒன்றை வழங்குவதையும் அருகில் அதிபர் க.பத்மநாதன் மற்றும் ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# வில்லியம்ஸை திருமணம் செய்ததன்மூலம் பிரிட்டிஷ் இளவரசியாகிய விமான ஊழியரின் மகள்

## கேத் மிடில்டனின் அதிர்ஷ்டக் குறிப்பு



பண்டைய காலங்களில் மன்னர் குடும்பத்து இளவரசர்கள் இன்னொரு மன்னர் குடும்பத்து இளவரசியைத்தான் திருமணம் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது.

எனவே, சாதாரண குடும்பத்தில் பிறந்த பெண் ராஜகுடும்பத்து இளவரசரை திருமணம் செய்து இளவரசி ஆகிவிட முடியாது.

ஆனால் இங்கிலாந்து ராஜகுடும்பத்தை சேர்ந்த இளவரசர்கள் நீண்டகாலமாகவே தங்கள் நாட்டு குடிமக்களின் ஒரு பெண்ணையே திருமணம் செய்து கொள்கிறார்கள்.

இங்கிலாந்து பட்டத்து இளவரசர் சாள்ஸ் இப்படித்தான் சாதாரண ஆசிரியையாக இருந்த டயானாவை திருமணம் செய்து கொண்டார்.

இப்போது அவர் வழியை பின்பற்றி அவருடைய மகன் இளவரசர் வில்லியமும் சாதாரண குடும்பத்து பெண்ணை திருமணம் செய்துள்ளார். இந்த அதிர்ஷ்டத்தைப் பெற்றவர் கேத்ரின் எலிசபெத் மில்டன் என்கிற கேத் மிடில்டன்.கேத் மிடில்டனின் தந்தை பெயர் மைக்கேல் பிரான்சிஸ் மிடில்டன். தாயார் பெயர் கரோல் எலிசபெத்.

தாய்-தந்தை இருவருமே பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான ஊழியர்களாக பணியாற்றியவர்கள். அப்போது அவர்களுக்குள் காதல் ஏற்பட்டு இருவரும் 1980 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். அவர்களின் முதல் குழந்தை தான் கேத்மிடில்டன்.

1982 ஆம் ஆண்டு ஜுன் 20 ஆம் திகதி கேத்மிடில்டன் பிறந்தார். பெர்க்ஷயர் நகரம் அருகே உள்ள பக்குல்பரி என்ற கிராமத்தில் பெற்றோருடன் வசித்து வந்தார். கேத்மிடில்டனுக்கு ஒரு தங்கை. ஒரு தம்பி உள்ளனர். முதலில் விமான ஊழியராக வேலை பார்த்த பெற்றோர் பின்னர் வேலையை கைவிட்டு விட்டு சுயமாக தொழில் தொடங்கினர்.

விருந்துகளுக்கு தேவையான பொருட்கள் மற்றும் விழா நிகழ்ச்சிக்கான அலங்காரம் செய்யும் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்தை தொடங்கினார்கள். அதில் நல்ல வருமானம் கிடைத்ததால் தற்போது இந்த நிறுவனத்தின் சொத்து மதிப்பு சுமார் 200 கோடியாக உள்ளது.

மூத்த மகள் கேத்மிடில்டன் மீது பெற்றோருக்கு அதிக பாசம் இருந்தது. அவரை அன்போடு வளர்த்தார்கள். கேத்மிடில்டன் சிறு வயதிலேயே எதிலும் தைரியமாக செயற்படுவார். கேத்மிடில்டன் பிறந்த நேரத்தில் பெற்றோர் இருவரும் ஜோர்தான் நாட்டில் அம்மானில் உள்ள பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தில் வேலை பார்த்தனர்.

இதனால் அங்குதான் அவர் மழலை பள்ளியில் சேர்ந்து படித்தார். அவருக்கு 4 வயதாக இருக்கும் போது இங்கிலாந்துக்கு வந்து விட்டனர். இதனால் இங்கிலாந்தில் கல்வியைத் தொடர்ந்தார். முதலில் பெர்க்டியர் நகரில் உள்ள ஆன்ட்ரூ பாடசாலையில் ஆரம்பக் கல்வியை பயின்றார்.

பாடசாலைப் படிப்பு முடிந்ததும் வில்ட்ஷயர் நகரில் உள்ள மால்பரோ கல்லூரியில் சேர்ந்து படித்தார். இந்தப் படிப்பு முடிந்ததும் 2001ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து சென்று அன்ட்ரூ பல்கலைக்கழகத்தில் வரலாறு பட்டப்படிப்பில் சேர்ந்தார். அப்போது அதே பல்கலைக்கழகத்தில் இளவரசர் வில்லியமும் படித்தார். இருவரும் சந்தித்துக் கொண்டனர்.

இருவரும் முதலில் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். பின்னர்அவர்களுக்குள்காதல் மலர்ந்தது. காதல் தீவிமாகியதும் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். 10 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த இந்தக் காதல் இப்போதுதிருமணத்தில் முடிந்துள்ளது.

இளவரசரை திருமணம் செய்ததன்மூலம் கேத் மிடில்டன் இப்போது இங்கிலாந்து இளவரசி ஆகிவிட்டார். ராணி எலிசபெத்துக்குப் பின்னர் பட்டத்து இளவரசரான சார்ள்ஸ் இங்கிலாந்து மன்னராவார்.

சார்ள்ஸ்க்குப் பின்னர் அடுத்த பட்டத்த இளவரசரான வில்லியம் இங்கிலாந்து மன்னராகி விடுவார்.அப்போது கேத்மிடில்டன் இங்கிலாந்து ராணியாக இருப்பார்.



கேத் மிடில்டன் வயிற்றில் பிறக்கும் முதல் குழந்தைதான் வில்லியமுக்கு பின்னர் இங்கிலாந்து நாட்டு மன்னராக வரும்.

இப்படி ஒரு அதிர்ஷ்டம் யாருக்கும் எளிதாகக் கிடைத்து விடாது.

இந்த விடயத்தில் கேத்மிடில்டன் மிகமிக அதிர்ஷ்டமான பெண் என்றே சொல்ல வேண்டும். கேத் மிடில்டன் சிறந்த புகைப்பட நிபுணர் ஆவார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவர் இங்கிலாந்தில் புகழ்பெற்ற புகைப்பட நிபுணர் மாரியோ டெஸ்டினோவிடம் புகைப்படப் பயிற்சி பெற்றார்.

மாரியோ டெஸ்டினோ இள வரசி டயானாவுக்கு நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் டயானா மற்றும் இளவரசர்கள் வில்லியம், ஹாரி ஆகியோரின் படங்களை பலமுறை எடுத்தவர். ❖

# ஸ்பெக்ட்ரம் வழக்கில் சி.பி.ஐ. சரிவர செயற்படவில்லை

## ஜெயலலிதா குற்றச்சாட்டு



ஸ்பெக்ட்ரம் வழக்கில் கனிமொழியை மட்டும் குற்றப்பத்திரிகையில் சேர்த்ததன் மூலம் சி.பிஜ.தன் பணியை சரிவர செய்ய வில்லை. நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென் றால் கருணாநிதி குடும்பத்தினர் அனைவரின் பெயர்களும் அதில் இடம்பெற வேண்டும் என அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் , உயர் நீதிமன்றின் உத்தரவின் படி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை விசாரிக்கும் சி.பி.ஐ.யின் இரண்டாவது குற்றப்பத்திரிகையில் இடம்பெற்ற தன் மகள் கனிமொழியை காக்க குழப்பமூட்டும் கதைகளை கட்ட விழ்த்து விட்டிருக்கிறார் கருணாநிதி. ஊழலை மறுத்துள்ளதோடு அது தணிக்கை துறைத் தலைவரின் கற்பனை என குறை கூறியிருக்கிறார்.

மேலாதிக்க சக்திகளின் சதி என்றும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். மகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் மோசமான செயற்பாட்டினை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டிருக்கும் ஊடகங்களை கடுமையாக சாடியிருக்கிறார் கருணாநிதி.

அவரின் இயல்பே இதுதான் தப்ப முடியாதபடி கடினமான நிலைக்கு தள்ளப்படும் தருணத்தில் அதிலிருந்து தப்பிக்க மற்றவர்கள் மீது சகட்டு மேனிக்கு சேற்றைவாரி இறைப்பது கருண்ணாநிதியின் வாடிக்கை.

சி.பி.ஐ.இதுவரை இரண்டு குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளது. இவையெல்லாம் அரசியல் காழ்ப்புணர்ச்சியாலோ செவி வழிச் செய்தி அல்லது நாகரிகமற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலோ நடக்கவில்லை. 80 ஆயிரம் பக்கங்கள் கொண்ட வலுவான ஆதாரங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்கள் ராஜா மற்றும் கருணாநிதி குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்ல. இந்தியாவின் மிகப் பெரிய மற்றும் செல்வாக்கு படைத்த தொழில் குழுமத்தைச் சேர்ந்த மேலான இயக்குநர்களும் தலைமை செயல் இயக்குநர்களும் குற்றம் சாட்டப்பட்டு இருக்கின்றனர். உண்மை இவ்வாறு இருக்க ஊழலை மூடி மறைக்கும் விதமாக செல்வாக்கு படைத்த ஒரு குழுவினரின் அரசியல் சதுரங்க விளையாட்டு இது என அபத்தமாக குற்றம் சுமத்துகிறார் கருணாநிதி. ஸ்பெக்ட்ரம் மூலம் கிடைத்த பணத்தை வெளிநாட்டு வங்கிகளிலும் கருணாநிதி குடும்பத்தினர் குவித்து வைத்திருக்கின்றனர். கனிமொழியை மட்டும் குற்றப் பத்திரிகையில் சேர்த்ததன் மூலம் சி.பி.ஐ. தன் பணியை சரிவர செய்யவில்லை. நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென்றால் கருணாநிதி குடும்பத்தினர் அனைவரின் பெயர்களும் குற்றப்பத்திரிகையில் இடம்பெற வேண்டும். இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## புட்டபர்த்தி புண்ணிய தலமாக மாற்றப்படும்

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீக பணிகளில் ஈடுபட்ட சாய் பாபா கடந்த 24 ஆம் திகதி ஜீவமுக்தி அடைந்தார். கடந்த புதன்கிழமை அவரது உடல் அங்குள்ள பிரசாந்தி நிலையத்தில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் அவரது சமாதியை தரிசனம் செய்ய பொது மக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. உலகம் முழுவதும் இருந்து இலட்சக் கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து சாய் பாபா சமாதியை தரிசனம் செய்தனர். இதேவேளை சாய்பாபா மறைந்த புட்ட பர்த்தி புண்ணிய தலமாக மாற்றப்படும் என்று ஆந்திர மந்திரி ரகுவீர ரெட்டி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இயக்குநர் கே.பாலச்சந்தருக்கு தாதா சாகேப் பால்கே விருது

இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தருக்கு 2011 ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய திரைப்படத் துறையில் சாதனையாளர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது இது என்பது குறிப்பிடத்தக்கது. தங்கத் தாமரை பதக்கம் ரூபா 10 இலட்சம் ரொக்கப் பரிசு ஆகியவை அடங்கிய இந்த விருது.

விருது கே. பாலச்சந்தர் பெயர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய செய்தி ஒலி பரப்புத்துறை அமைச்சகம் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக திரைத்துறையில் உள்ள இயக்குநர் பாலசந்தர் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் இதுவரை 101 படங்களை இயக்கியுள்ளார். ஏராளமாக படங்களை தயாரித்தும் உள்ளார். நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், சிரஞ்சீவி, நாகேஷ், ராதாரவி, நடிகைகள் ஜெயந்தி, ஸ்ரீபிரியா, ஜெயசுதா, ஜெயப்ரதா,சுஜாதா, சரிதா என 30க்கும் மேற்பட்டோரை அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் பாலச்சந்தர்.

கமல்ஹாசன் உள்ளிட்ட ஏராளமான இயக்குநர்களையும் அவர் உருவாக்கியுள்ளார்.81 வயதாகும் பாலச்சந்தர் இயக்கிய இருகோடுகள் , அபூர்வராகங்கள், தண்ணீர் தண்ணீர் , அச்சமில்லை அச்சமில்லை ஆகிய நான்கு தமிழ்ப்படங்கள் தேசியவிருதுகளை வென்றுள்ளன. 1988 இல்வெளியான ருத்ரவீணா தெலுங்குப்படம் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியதற்கான நாகீஸ்தத் தேசிய விருதை வென்றது. ஒரு வீடு இருவாசல் படம் 1991ஆம் ஆண்டுக்கான தேசிய விருதை வென்றது.

பலமுறை தமிழக அரசின் விருதுகளைப் பெற்றுள்ளார். கலைமாமணி விருதையும் அவர் பெற்றுள்ளார். திரைத்துறையில் இவர் ஆற்றிய சாதனைக்காக மத்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருதை 1987 இல் அளித்துக் கௌரவித்துள்ளது. (ஸ்ரீ)

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
- மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## உண்மையை மறைக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அது இரட்டிப்புப் பலம் பெறுகின்றது

ஐ.நாவின் அறிக்கைக்கு எதிராகக் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கானவர்களின் கையெழுத்துகளைப் பெற்று அதனை ஐ.நாவுக்கு அனுப்புவதன் மூலம் ஐ.நா. விடுத்த அறிக்கைக்கு எதிர்ப்பைக் காட்டும் முயற்சியாக இது நடக்கின்றது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக நடைபெறும் கையெழுத்துப் போராட்டத்தில் தமிழர்கள் சிலரும் ஒப்பமிடுவதாகத் தகவல்.

பரவாயில்லை. எங்கும் எல்லாமும் இருக்கவே செய்யும். அந்தவகையில் – தமிழர்களில் சிங்களவர்களுக்கு ஆதரவானவர்கள், சிங்களவர்களில் தமிழர்களுக்கு ஆதரவானவர்கள், தமிழர்களில் அரசுக்கு விசுவாசமானவர்கள், சிங்களவர்களில் அரசுக்கு எதிரானவர்கள், அரசில் அரசுக்கு எதிரானவர்கள் – தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமை கிடைக்க வேண்டுமென நினைப்பவர்கள் – விக்கிரமபாகு கருணாரட்ணாக்கள், விமல் வீரவன்ஸக்கள், எல்லாவல மேதானந்த தேரர்கள், வாசுதேவ நாணயக்காரர்கள். இப்படிப் பலதும் பத்தும் எங்கும் எதிலும் இருக்கும். அதற்காக உண்மைகளை மறைக்கவோ மறுக்கவோ முற்படுவது, அதற்கு உடந்தையாக இருப்பது, உதவி புரிவது அத்தனையும் ஜனநாயக விரோதமும் மனித நிந்தையும் ஆகும்.

உண்மை என்பதன் குணகம் ஒன்று. அங்கு அரைக்கும் காலுக்கும் முக்காலுக்கும் இடமேயில்லை. இது யாருக்காகவும் இருக்கலாம். உண்மைகளை மறைக்க முற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது இரட்டிப்புப் பலத்தைப் பெறுகின்றது என்பது எமது தாழ்மையான கருத்து.

எனவே ஐ.நா. நிபுணர் குழு விடுத்த அறிக்கையில் இருக்கின்ற விடயங்களை ஆராய்கின்ற – அதற்குப் பரிகாரம் தேடுகின்ற தார்மீகப் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு.

இலங்கை அரசு இன்னொரு நாட்டின்மீது நடத்திய தாக்குதல் தொடர்பாக, ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை வெளியிடவில்லை.

மாறாக இந்த நாட்டின் பிரஜைகள்மீது நடந்த கொடூரத்தையே அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. எனவே இந்த நாட்டின் பிரஜைகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கண்டனமும் ஆர்ப்பாட்டமும் செய்வது அறியாமை.

இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்றே கூறிவந்துள்ளனர். அவை நடந்தனவா? ஆக, கையெழுத்துப் போராட்டத்திற்கு ஐ.நா. முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றால் முன்பு நடந்த அத்தகைய போராட்டங்களுக்கும் இலங்கை ஆட்சியாளர்கள் மதிப்பளித்திருக்க வேண்டும்.

அன்று அதற்கு முக்கியத்துவம் இல்லையென்றால் இன்று எப்படி...?

ஆக, ஐ.நாவுக்கு மதிப்பளித்து இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவது பற்றிய செயற்பாடுகளை முன்னெடுப்பதே உத்தமம்.

# தமிழ் மக்களின் போராட்டத்தை எவராலும் அழித்துவிட முடியாது

## மாவை எம்.பி. உரை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தை எந்தத் தீய சக்தியாலும் அழித்துவிட முடியாது. ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போர்க்குற்றங்களின்படி இலங்கை அரசாங்கமானது தண்டிக்கப்பட வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.


ஒரு இனத்தினுடைய அழிவிலிருந்து இன்னொரு இனம் பெருமை கொள்ளலாகாது என்றும் சுட்டிக்காட்டிய அவர்; தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டம் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறில், தமிழரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றும்போதே மாவை எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழ் மக்களது உரிமைகள் இன்னும் அளிக்கப்படவில்லை. ஆயுத வழி உரிமைகள் அழிக்கப்பட்டாலும் ஜனநாயக வழியிலான எமது உரிமைப் போரை நாங்கள் முன்னெடுப்போம். தமிழினத்தின் விடிவுக்காகத் தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டு உரிமையை மீட்டெடுப்போம்.

தமிழரசுக் கட்சியானது தமிழர்களுடைய உரிமையை முன்னெடுக்கின்ற ஒரு சிறந்த கட்சியாகும். இதன் பின்னணியில் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது உரிமைக்கான குரலை, மே தின அறைகூவலை நாங்கள் ஓங்கி ஒலிப்போம். காலம் தாழ்த்தாது இலங்கை அரசாங்கமானது தமிழர்களுடைய பிரச்சினையில் இதய சுத்தியுடன் பேச்சு வார்த்தையை முன்னெடுத்து தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றார். (ச–5)

# தமிழக சட்டப் பேரவை தேர்தல்வரை நிபுணர் குழு அறிக்கையை வெளிவராமல் தடுத்த நம்பியார்



(நியூயோர்க்)

தமிழக சட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் வரை நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிடுவதை பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரே நிறுத்தி வைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழுவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பில் ரஷ்யா தமது கருத்தை வெளியிட்டபோதும் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் ஊடகங்களுக்கு கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இதற்கான காரணமாக அவருக்கு ஆங்கிலம் தெரியாது எனக் கூறப்பட்டதாக சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் ஏன் அவர் மொழிபெயர்ப்பாளரைக் கொண்டு ஊடகங்களுக்கு கருத்தை கூறியிருக்க முடியாது என்று சண்டே லீடர் கேள்வி எழுப்பியுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதியின் சகோதரரும் இலங்கை-இந்திய உறவுக்கு முக்கியமானவருமான பசில் ராஜபக்ஷ, பான் கீ மூன் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடாமல் இருந்து வருகிறார்.

இதற்கான காரணமாக, அவர் புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது சர்வதேசத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் என்று சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது. எனினும் ஆங்கில ஊடகம் ஒன்று பசில் ராஜபக்ஷ, பான் கீ மூனின் அறிக்கைக்கு எதிராக செயற்படுவதாக செய்தி வெளியிட்டுள்ளமையை சண்டே லீடர் சுட்டிக்காட்டியுள்ளது.

அவரே நிபுணர்குழுவின் அறிக்கையை தாருஸ்மான் அறிக்கை என்ற பெயரில் அழைக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளதாகவும் ஆங்கில ஊடகத்தை கோடிட்டு சண்டேலீடர் தெரிவித்துள்ளது. ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் இலங்கை வந்தபோது அவருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டு அறிக்கையில் கையெழுத்திடுவதை பசில் ராஜபக்ஷ விரும்பவில்லை. எனினும் பசிலின் கருத்தை கேட்காமலேயே மஹிந்த ராஜபக்ஷ, பான் கீ மூனுடன் கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டார்.

இந்த நிலையில் தற்போது அந்த அறிக்கையை பான் கீ மூன் தமக்குச் சாதகமாக பயன்படுத்துவதை பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். அதன் காரணமாகவே இலங்கை பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தியாவின் அழுத்தத்தின் அடிப்படையில் 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுல்செய்ய வேண்டும் என்று பசில் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கூறியிருக்கிறார். எனினும் அதனை மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துவிட்டார்.

அதன்பின்னரே பசில் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்குவதில் இருந்து தவிர்க்கப்பட்டார் என்றும் சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் பசில் ராஜபக்ஷ, பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக செயற்படுகிறார் என்ற செய்தி வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில் தமிழகத்தின் சட்ட சபைத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் வரை நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிடுவதை பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரே நிறுத்தி வைத்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அறிக்கை தமிழக சட்ட சபைத் தேர்தலுக்கு முன்னர் வெளியிடப்படுமானால் அது ஆளும் தி.மு.க மற்றும் காங்கிரஸ் கூட்டணிக்குப் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் என்ற காரணத்தினாலேயே அதனை சட்ட சபைத் தேர்தலின் பின்னர் வெளியிட நம்பியார் தமது பங்கைச் செலுத்தியதாக சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் 13ஆவது அரசியலமைப்பை இலங்கை அரசாங்கம் இன்னும் நடைமுறைப்படுத்தாமையே பான் கீ மூனின் அறிக்கை தொடர்பில் இந்தியா கருத்து வெளியிடாமைக்கான காரணம் என்று சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ கருத்து வெளியிடுவதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அனுமதியளித்ததாக சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ–2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



உலகிலுள்ள அறிவு அனைத்தையும் மனதின் ஆற்றல்களை ஒருமுகப்படுத்துவதைத் தவிர வேறு எந்த வகையால் மக்கள் பெற்றிருக்கிறார்கள். மூடப்பட்டுள்ள கதவை எப்படித் தட்டவேண்டும், எப்படித் தேவையான படி தாக்கவேண்டும் என்பது மட்டும் நமக்குத் தெரிந்தால் உலகம் தனது இரகசியங்களை வெளியிடத் தயாராகியிருக்கிறது.

அத்தகைய வலிமையும் தாக்கும் வேகமும் மனதை ஒருமுகப்படுத்துவதன்மூலம் தான் கிட்டுகிறது. மனித உள்ளத்தின் ஆற்றலுக்கு ஓர் எல்லையே இல்லை.

மனது அதிகமான ஒருமுகப்படப்பட அதன்ஆற்றல் அதிகமாக ஓர் இடத்தில் செலுத்தப்படுகிறது. இதுதான் மனதின் ஆற்றலைப் பற்றிய இரகசியமாகும்.

# தெணியானின் "தவறிப்போனவன் கதை"




தனிமனித சமூக தேசிய அமைப்புக்களில் உள்ளடங்கியிருக்கும் பல்வேறு கூறுகளின் அசைவியக்கத்தில் ஏற்படுகின்ற முரண்பாடுகளே இலக்கியப் படைப்புக்களாகின்றன. விஞ்ஞான அடிப்படையில் நிகழ்கின்ற அசைவியக்கத்தின் அடிநாதமாக நீதி, அநீதி என்கின்ற இருநிலைகளே பல்வேறு வடிவங்களில் மூட்டம் கொண்டிருப்பதை ஊன்றிக் கவனிப்பதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். நீதிக்கும் அநீதிக்கும் இடையில் நிகழ்கின்ற முரண்பாட்டு இயக்கத்தில் நீதி தோற்கும் போது 'மனிதம்' என்கிற சத்திய உணர்வு துடிக்கின்றது. இத்துடிப்பு சத்திய உணர்வுள்ள சகல மனிதர்களிடமும் ஏற்படுகின்றது. இந்த மனிதர்களில் ஒரு சிலரின் இதயங்களில் மட்டும் அவ்வுணர்வு 'நெருடலாகி' ஜீரணமாகாத நிலையில் தொடர்ந்தும் இதயத்தை நெருடிக் கொண்டேயிருக்கின்றது. இவர்களாலேயே அச்சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

இப்பதிவுகளை மேற்கொள்பவர்களே எழுத்தாளர்களாகவும் ஊடகவியலாளர்களாகவும் சமூகத்தில் இனங்காணப்படுகின்றனர்.

நீதிக்கும் அநீதிக்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்நிலைகள் அதன் தோற்றப்பாட்டில் ஒன்றாக இருப்பினும் அதன் தீர்வுக்கான எதிர்வு கூறலில் அல்லது புரிதலில் படைப்பாளிகள் முரண்படுகின்றனர். படைப்பாளிகளினது தேடல் முயற்சியை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் மனப்பரப்பளவும் அமைகின்றது. மனப்பரப்பளவின் வளத்தைப் பொறுத்தே முரண்பாடுகளுக்கான எதிர்வு கூறல்களும் அமைந்து விடுவதால் இம்முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவைகளாகின்றன. இம்முரண்பாடுகளே இலக்கிய முரண்பாடுகளாக அமைகின்றன. இந்த முரண்பாட்டு நிலைகொண்ட படைப்பாளர்கள் ஒரு குழுமமாக மாறும் போது அம்முரண்பாடு 'இலக்கியக் கோட்பாடு' எனும் வலிமையைப் பெற்று வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்கள் முற்போக்கு இலக்கிய அணியைச் சேர்ந்தவர். இச்செய்தி இலக்கியப் பரப்பில் புதிய செய்தியல்ல. ஏனெனில் மூத்த எழுத்தாளரான தெணியான் அவர்கள் சர்வதேச எழுத்தாளர்களின் அங்கீகாரத்தைப் பெற்றவர்.

இவர் நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் 'தவறிப் போனவன் கதை' எனும் இந்நாவலோடு ஒன்பது நாவல்களையும் பதிப்பித்துள்ளார்.

சமூகத் தளங்களிலும் குறிப்பாக அரசியற் தளங்களிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட வேளைகளிலும் தெணியான் அவர்கள் தனது இலக்கியக் கோட்பாட்டில் நங்கூரம் இட்டு இன்றுவரை நிற்கின்றார் என்பதை இங்கு கூறிவைப்பது அவசியமென எண்ணுகின்றேன்.

நூற்று அறுபது பக்கங்களைக் கொண்ட 'தவறிப் போனவன் கதை' என்ற இந்நாவல் இருபத்தி நான்கு அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்நாவல் சகல காலங்களிலும் சகல வழிகளிலும் தவறிப்போனவர்களுக்கு சமர்ப்பணமென்ற ஒரு குறிப்பு இடம்பெற்றுள்ளது. ஒருபுதுமையான சமர்ப்பணமாகவும் புரிதலில் சில இடர்பாடுகளுக்குரியதுமான ஒன்றாகவும் இக்குறிப்பு தென்படுகின்றது.

'பற்றையை நோக்கி எறியப்படவில்லை. பற்றைக்குள்ளிருந்த முயலை நோக்கியே கல் எறியப்பட்டுள்ளது' எனும் தெணியான் அவர்களின் இலக்கிய நோக்கத்தை இலகுவாகப் புரியக்கூடியதாக இருந்தது.

சமர்ப்பணக் குறிப்பை அடுத்து தெணியான் அவர்களின் உரைமட்டும் இடம்பெற்றுள்ளது. வேறெந்தக் குறிப்புக்களும் இடம்பெறவில்லை.

தெணியான் அவர்களின் குறிப்பில் இந்நாவல் உருவானதற்கான காரணங்களை விளக்கியுள்ளார். தெணியான் அவர்களின் படைப்புக்களில் 'தவறிப்போனவன்கதை' என்ற இந்நாவல் வேறுபட்டு அமைந்திருப்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமானதாகும். ஏனெனில் இந்நாவல் தெணியான் அவர்களின் இலக்கியப் பார்வையின் புதிய தொரு பக்கத்தை படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

## நாவல் ஒரு நோக்கு

இந்நாவலில் தணிகாசலம் ஆசிரியர் என்ற பெயரில் தெணியான் அவர்களே நடமாடுவதை நாவலை வாசிக்கும்போது புரிந்து கொள்ளலாம்.

எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்
டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகர்க்கு

என்ற குறளின் அடியொற்றி இந்நாவலில் முதன்மைக்கருத்து அமைந்துள்ளது.

பாதுகாப்புப் படையினரால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட இரவுவேளை உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த தணிகாசலம் ஆசிரியரை 'அநீதி' என்ற பெயருடைய முன்பின் அறிமுகமில்லாத ஒரு மனிதன் தனது உயிரைப் பணயம் வைத்து தணிகாசலம் ஆசிரியரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கிறான். தணிகாசலம் ஆசிரியர் குணமடைந்து வீட்டுக்குச் சென்ற பின் முகந்தெரியாத அந்த 'அநீதி' என்ற மனிதனைச் சந்தித்து நன்றியினைத்தெரிவிக்க முயற்சி செய்கி றார். ஆனால் அந்த 'அநீதி' என்ற மனிதன் சுட்டுக் கொலை செய்யப்பட்டு விட்டதாகச் செய்தி வருகின்றது. அந்தச் செய்தியைக் கேட்டு தணிகாசலம் ஆசிரியரின் இதயத் தில் இரத்தம் சொட்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சிறுகதைக்குரிய ஒரு கருவூலத்தைத் தெணியான் அவர்கள் நாவலாக எழுதியுள்ளார்' என்றொரு விமர்சனம் வாசகர் மத்தியில் எழக்கூடும். செய்ந்நன்றி மறப்பவர்களுக்கு உய்வில்லை என்ற வள்ளுவனின் குறள் ஒரு மனிதனின் பண்பு விருத்தியின் முதற்புள்ளியாக அமைகிறது. இந்த நாவலின் அமைப்பில் இரண்டு விதமான முக்கிய அம்சங்களை என்னால் அவதானிக்க முடிந்தது.

ஒன்று 'அநீதி' என்ற அந்த முகந் தெரியாத மனிதன் சுடப்பட்டு இறந்துவிட்டான் என்ற செய்தியை தணிகாசலம் ஆசிரியர் கேள்விப்பட்டதும் 'யார் சுட்டார்கள்?', 'ஏன் சுட்டார்கள்?' என்ற இருகேள்விகளைக் கேட்கின்றார், கேள்விகள் இரண்டும் இயல்பானவைகள். இக் கேள்விகள் தொடர்பான உண்மையான பதில்களையோ அல்லது ஊகிப்பான பதில்களையோ எழுத்தாளர் குறிப்பிடவில்லை. ஏதாவது ஒரு பதிலையாவது எழுத்தாளர் குறிப்பிட்டிருப்பின் 'அநீதி' என்ற அந்தப் பாத்திரம் பற்றிய நமது மனப்படிமத்தில் நலிவு நிலை ஏற்பட்டு நாவலின் கருவூலம் கருகிப் போவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். நாவலை நகர்த்தியுள்ள அவதானம் பாராட்டுக்குரியது.

தவிர நாவலின் தத்துவார்த்தச் செறிவுகளும் பண்பாட்டுச் செறிவுகளும் நிறைய உள்ளடங்கியுள்ளன. மிகவும் இலகுவான மொழிப் பிரயோகம் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

### கே.ஆர்.டேவிட்

# சர்வதேசத்துடன் முரண்பட்டுக்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்துடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பெரும் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்தப் பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராய வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் ஆரம்பமான காலம் முதல் இரண்டு தரப்பினராலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றமையை மறுக்க முடியாது. இவ்வாறு இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் தோண்டித் தோண்டி விசாரணை நடத்துவதில் எவருக்கும் நன்மை கிட்டாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கே அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் முனைப்பு காட்ட வேண்டுமே தவிர தமிழ்-சிங்கள சமூகங்களுக்கு இடையில் மீளவும் பிளவினை ஏற்படுத்தக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பான சர்ச்சையின் போது அரசாங்கம் பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கம் உணர்ச்சி வசப்படுவதனை விடவும் நிதானமாக செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த இராஜதந்திர அணுகுமுறைகளின் மூலம் சிக்கல் நிலைமையிலிருந்து மீள வாய்ப்பிருப்பதாக அவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

## மழையினால் நால்வர் பலி; 21 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் பெரும் பாகங்களில் பெய்த கடும் மழை காரணமாக நால்வர் பலியானதாகவும் 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 227 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஏனைய பகுதிகளில் இடைக்கிடையே மழை பெய்யும் எனவும் தென்கிழக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## தொழிற்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை இணைந்து மாற்று வலுவுள்ளோருக்கான தொழிற்பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கு பொருத்தமான தொழிற்பயிற்சிகளை கற்பதற்கு ஆர்வமுடைய மாற்று வலுவுள்ளோர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிழமை நாட்களில் (சனி, ஞாயிறு தவிர்ந்த) காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை அலுவலக நேரத்தில் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வாழைச்சேனைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மூக்கார்கல் அம்புஸ்குடா பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜயவீர தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த பிரதேசத்தை சோதனையிட்ட போதே கிறனேட் 10, சயனைட் குப்பி 02, டெட்டனேட்டர் 30, ஜொனி பட் 01, ஜொனி பட் பீஸ் 02 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. இப்பொருட்களின் ஜொனி பட்டில் JONY SPECIAL-95 MADE IN TAMIL EELAM என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இவை யுத்தகாலத்தில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களாக இருக்கலாம் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜயவீர தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மீள் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விஞ்ஞானப் பட்டமாணி (B.SC. Degree) மற்றும் அத்தி வாரக் கற்கை நெறிகளுக்கான (Foundation Course in Science) விண்ணப்பங்களைப் பெறத் தவறியவர்கள் நாளையும் நாளை மறுதினமும் மற்றும் 5 ஆம் திகதியும் அவற்றைப் பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதிக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அத்துடன் க.பொ. த உயர் தரத்தில் எத்தனை தடவைகளிலேனும் 3 சித்திகளைக் கொண்டுள்ளவர்களும் சித்திகள் போதாமலுள்ளவர்களும் B.SC பட்டத்தைத் தொடர முடியுமென்றும் யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த மே தினக் கூட்டத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருவதையும் ஊர்வலத்தில் கலந்துகொண்டுள்ளமையையும் படங்களில் காணலாம்.

# ஆட்சி மாற்றத்தின் பின்பே மேற்குலகம் ஆறுதல் அடையும்

## கொழும்பு ஊடகம் தெரிவிப்பு

இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு மேற்குலகம் மேற்கொண்டுள்ள முதலாவது படிமுறைதான் பான் கீ மூனின் அறிக்கை. ஜனாதிபதி மகிந்தவையும் கோத்தபாயவையும் அகற்றிய பின்னரே மேற்குலகம் ஆறுதல் அடையும் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று தனது ஆய்வுச் செய்தியில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு மேற்குலகம் மேற்கொண்டுள்ள முதலாவது படிமுறைதான் பான் கீ மூனின் அறிக்கை. ஐ.நாவின் அறிக்கைக்காக ஆதரவுகளைத் திரட்டுவதற்கே கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸ் பல நாடுகளினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பிரதிநிதிகளை அழைத்து இரகசியக் கூட்டத்தை நடத்தியுள்ளார்.

எதிர்வரும் வாரம் அமெரிக்காவின் துணை வெளிவிவகாரச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் கொழும்பு வரும்போது மகிந்தவை வெளியேற்றும் மேற்குலகத்தின் நடவடிக்கைகள் (Opration Exit Rajapaksa) ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

அமைதி நடவடிக்கைகள் மற்றும் ஆழிப்பேரலைக் கட்டமைப்புக்கள் மூலம் மேற்குலகம் இலங்கையில் கால்பதிக்க முனைந்திருந்தது. ஆனால் அவை நிறைவேறவில்லை.

விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களை அமைதி முயற்சிகளின் ஊடாக தக்கவைக்கவே மேற்குலகம் விரும்பியிருந்தது. அதற்காகவே நோர்வேயில் இருந்து எரிக் சொல்ஹெய்மையும் அனுப்பியிருந்தது.

இலங்கையில் உள்ள இரு முக்கிய அரசியல் கட்சிகளையும் கட்டுப்படுத்தவும் மேற்குல்கம் முயன்றிருந்தது.தமது சொற்படி இலங்கை நடக்க வேண்டும் என மேற்குலகம் விரும்புகின்றது.

ஆனால் மகிந்த முரண்டு பிடிப்பதால் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மேற்குலகம் முனைந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மேற்குலகம் பொன்சேகாவை ஆதரித்ததே மகிந்தவுக்கான செல்வாக்கை சிங்கள மக்களிடம் அதிகரித்திருந்தது.

மேற்குலகத்தின் தலையீட்டை சிங்கள மக்கள் விரும்பவில்லை. ஆனால் தற்போது வெளியிடப்பட்டுள்ள ஐ.நாவின் அறிக்கை என்பது மகிந்தவின் தலைக்குமேல் தீர்க்கப்பட்ட வேட்டாகும். வருங்காலத்தில் அவரினதும் அவரின் சகோதரர்களினதும் தலைகளை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்படும்.

ஈராக்கில் இடம்பெற்ற போர்வரையிலும் கடந்த 110 வருடங்களில் 14 நாடுகளின் அரசுகளை அமெரிக்கா தூக்கி வீசியுள்ளது.அதற்கு அவர்கள் பல காரணிகளை முன்வைத்திருந்தனர். ஹவாய் பகுதியில் 1893 ஆம் ஆண்டு முதலாவது ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா மேற்கொண்டது.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈரான், குவாட்டமாலா மற்றும் சிலி ஆகிய நடுகளின் தலைவர்களை கூட இராணுவப் புரட்சிகளை ஏற்படுத்தி அமெரிக்கா கவிழ்த்திருந்தது.

தனது அதிகாரத்தை தக்கவைக்கவும் வளங்களைக் கைப்பற்றவுமே அமெரிக்கா இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மகிந்தவையும் கோத்தபாயவையும் அகற்றிய பின்னரே மேற்குலகம் ஆறுதல் அடையும். எனவே மேற்குலகத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் என்பது பொருளாதாரத் தடைகளே என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஓமந்தை ரயில் நிலையம் இம்மாதம் செயற்படும்

ஓமந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் புகையிரத நிலையம் இம்மாத இறுதியிலிருந்து செயற்படத் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புகையிரத நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுற்றுள்ள நிலையில் இம்மாதம் 28 ஆம் திகதி ஓமந்தைப் புகையிரத நிலையம் திறந்து வைக்கப்படும் என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன் பின் இதுவரை தாண்டிக்குளம் வரை மட்டுமே செயற்படும் யாழ்தேவி புகையிரதம் ஓமந்தை வரை பயணத்தை நீடிக்கும் என்றும் அறியக்கிடைத்துள்ளது.

வடக்கின் புகையிரத நிலையங்களைப் புனரமைப்பதற்கான பணியில் முதலாவதாக திறந்து வைக்கப்படும் புகையிரத நிலையம் ஓமந்தை என்பதுடன் பயணிகளின் நலன் கருதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தையொத்த வசதிகள் அங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# பிரபல நடிகர் அலெக்ஸ் காலமானார்

தமிழ் சினிமா நடிகரும் பிரபல மேஜிக் நிபுணருமான அலெக்ஸ் (வயது 52) நேற்று சென்னையில் காலமானார். அவரது மறைவுக்கு திரையுலகைச்சேர்ந்த பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து 24 மணிநேரம் மேஜிக் நிகழ்ச்சி நடத்தி கின்னஸ் சாதனை படைத்த நடிகர் அலெக்ஸ் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமால் பாராட்டப்பட்டவர்.

திருச்சி துரைசாமிபுரத்தை சேர்ந்த இவர் வள்ளி படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். தொடர்ந்து மிட்டா மிராசு, கோவில்பட்டி வீரலட்சுமி உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்துள்ள இவர், தமிழ் சினிமாவில் வித்தியாசமான வில்லன் மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து புகழ் பெற்றவர்.

உடல் நலக் குறைவு காரணமாக கடந்த ஒரு வாரமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அலெக்ஸ் நேற்று மாலை 4.30 மணியளவில் காலமானார்.

இதுபற்றிக் கேள்விப்பட்ட திரையுலக நண்பர்கள் பலரும் மருத்துவமனைக்கு விரைந்து சென்று அலெக்சின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தனர்.

அலெக்சுக்கு சொந்த ஊரான திருச்சியில் இறுதிச் சடங்குகளைச் செய்ய உறவினர்கள் முடிபு செய்துள்ளனர்.

நாளை திருச்சியில் இறுதிச் சடங்குகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் அலெக்ஸ் கடந்த ஆண்டு திருச்சியில் பொதுமக்கள் முன்னிலையில் தொடர்ந்து 24 மணி நேரம் மேஜிக் நிகழ்ச்சியை நடத்தி கின்னஸ் சாதனை படைத்தார்.



அதற்கு முன்பு 600 மாணவர்கள் மத்தியில் தொடர்ந்து 12 மணி நேரம் மேஜிக் செய்ததற்காக லிம்கா புத்தகத்தில் இடம்பெற்றார்.

இலங்கையில் நடத்திய மேஜிக் நிகழ்ச்சிக்காக இங்குள்ள திறந்த வெளி பல்கலைக்கழகம் அலெக்சுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான அல்பிரட் நோபல் பரிசை வழங்கிக் கௌரவித்துள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் அலெக்சுக்கு டாக்டர் பட்டம் வழங்கியிருக்கிறது. அபுதாபியில் நடந்த விழாவில் அலெக்சுக்கு செவாலியே விருதும் வழங்கப்பட்டிருக்கிறது.

இது தவிர ஏராளமான பட்டங்கள் மற்றும் விருதுகளுக்கு சொந்தக்காரராக இருந்த அலெக்சின் மறைவு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல லட்சக்கணக்கான இரசிகர்களுக்கும் பேரிழப்பாகும்.

நடிகராக வெள்ளித்திரையில் பளிச்சிட்டாலும் மேஜிக்கில் ஏராளமான சாதனைகளைபடைத்த அலெக்சுக்கு கரகாட்டம், மயிலாட்டம், சிலம்பம், மல்யுத்தம், நாடகம் எனப் பல துறைகளில் ஆர்வம் இருந்தது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யானையிலிருந்து தவறி விழுந்தார் துட்டகைமுனு



(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வா துட்டகைமுனு மன்னனாக நடிக்க முயன்று யானையிலிருந்து தவறிக் கீழே விழுந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் மேர்வின் சில்வா துட்டகைமுனு மன்னனின் கதாபாத்திரத்தில் நடிக்கும் "சுரங்கனா லொவின்" எனும் திரைப்படத்தின் ஒளிப்பதிவு அண்மையில் ஆரம்பிக்கப்படிருந்தது. அதன் போது அமைச்சர் மேர்வின் யானை மேலேறி போருக்குப் போவது போன்ற காட்சி படமாக்கப்பட்டுள்ளது.

ஆயினும்யானைமீதேறமுயன்ற அமைச்சர் மேர்வின் சில்வா தவறிக் கீழே விழுந்துள்ளார். அவர் விழுந்த வேகத்தில் யானை மிரண்டு குழம்பிவிட அவரது மெய்ப்பாது காவலர்கள் விரைந்து செயற்பட்டு அமைச்சரைக் காப்பாற்றியுள்ளனர்.

ஆயினும் அமைச்சர் மேர்வின் சில்வா யானையிலிருந்து விழுந்த காட்சி அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளர்களின்தும் டிஜிடல் கேமராக்களில் படமாக்கப்பட்டுள்ளது. அவற்றை அழித்துவிடுமாறு அமைச்சர் கடும்தொனியில் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் அவ்வாறு தான் கீழே விழுந்த புகைப்படம் ஊடகங்களில் வெளியானால் அதனுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்துக் கடும் தண்டனை வழங்கவுள்ளதாகவும் அவர் அச்சுறுத்தியுள்ளார். (ச-5)

## சீனாவில் பொது இடங்களில் புகைப்பிடிக்க தடை

சீனாவில் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கான தடை நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது. உலகத்தில் புகைபிடிப்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சீனாவில் உள்ளனர். இங்கு புகைபிடிப்பதால் ஏற்படும் வியாதிகளால் ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் பேர் இறக்கின்றனர்.

ஆனால் சீனாவில் புகைபிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தாலும் அந்த தடையை மீறுபவர்களுக்கு சட்டத்தில் எவ்வித தண்டனையும் இல்லை என்பது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், ரயில் நிலையங்கள், காட்சியரங்கங்கள் போன்ற இடங்களில் புகைபிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தாலும் அலுவலகங்களில் புகை பிடிக்க தடை விதிக்கப்படவில்லை.

தங்களுடைய பணியாளர்களுக்கு புகைபிடிப்பதால் ஏற்படும் பாதகங்கள் குறித்து எடுத்துக் கூறவேண்டிய கட்டாயம் வியாபார நிறுவனங்களை நடத்துபவர்களுக்கு உள்ளது. ஆனால் பணியாளர்கள் அலுவலகத்தில் புகை பிடிப்பதை தடுக்க வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு இல்லை.

இதேபோன்ற சட்டம் கடந்தாண்டு ஷாங்காய் நகரிலும் அமுல்படுத்தப்பட்டது.

# இலங்கை போர்க்குற்றங்களை விசாரிக்க விசேட நீதிமன்றம்

## ஐ.நா. உள்ளக அறிக்கையால் பரபரப்பு

(கொழும்பு)

**யூகோஸ்லாவியா, லைபீரியா போன்று இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசேட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் வெளிவிவகார கொள்கைகளுக்கான ஆராய்ச்சி நிலையம் தயாரித்த இலங்கை தொடர்பான உள்ளக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியிடப்பட்ட இந்த ரகசிய ஆவணத்தை இன்னர் சிற்றி பிரஸ் வெளியிட்டுள்ளது. இந்த ஆவணத்தில் இலங்கை தொடர்பான விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாடு முக்கியமானவை என குறிப்பிடப்பட்டுள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபை கடந்த காலத்தில் முன்னெடுத்த இலங்கையின் போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக் கூறும் கடமைப்பாடுகளை நிறைவேற்றும் முயற்சிகளுக்கு இந்தியாதான் மிகுந்த தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பில் போர்க்குற்றங்கள் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு பகிரங்கமாக தெரிவிக்கப்பட வேண்டும் என இந்திய மனித உரிமை கழகம் வலியுறுத்தியுள்ளதையும் தி.மு.க போன்ற கட்சிகளின் ஆதரவை இந்திய ஆட்சியாளர்கள் எதிர்பார்ப்பதையும் குறித்துள்ள மேற்படி அறிக்கை இவ் விவகாரத்தில் இந்தியா எத்தகையதொரு நிலைப்பாட்டை எடுக்கும் என்பது கவனத்திற்கு உரியது எனவும் தெரிவித்துள்ளது.

வன்னிப் போர்க்குற்றங்கள் தொடர்பில் அரசாங்கத்தை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் முன்னிறுத்தி விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என உறுதிப்படுத்தியுள்ள இந்த ஆவணம் இலங்கை அரசாங்கம் மனித குலத்திற்கு எதிரான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையால் விசேட நீதிமன்றம் நியமிக்கப்பட வேண்டும் எனவும் யூகோஸ்லாவியா, லைபீரியா போன்ற நாடுகளுக்காக உருவாக்கப்பட்டது போன்று இந்த நீதிமன்றம் அமையலாம் என்றும் இவ் ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச போர்க்குற்றங்கள் தொடர்பான ரோம் ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திடாத போதிலும் கொழும்பு மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்க வகை செய்யும் ஜெனிவா ஒப்பந்தம் உட்பட குறைந்தது நான்கு முக்கியமான சர்வதேச ஒப்பந்தங்களில் இலங்கை கையொப்பம் இட்டுள்ளதாகவும் இந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசாரணைகளை ஆரம்பித்தால் இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகள் நேரடியாக எதிர்க்காதெனவும் இந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் பாதுகாப்புப் பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இந்தியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் நடந்து கொள்ளலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் வெளிவிவகார கொள்கை தொடர்பான இந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# புலிகளை தோற்கடித்தது...

மே தினத்தை முன்னிட்டு ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பினால் கொழும்பு நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் நாட்டு மக்களும் சுதந்திரத்தைப் பாதுகாப்பார்கள் எனவும் இலங்கையில் நடைபெற்ற அனைத்து மே தினக் கூட்டங்களும் தொழிலாளர் உரிமைக்காக நடத்தப்பட்டது எனவும் இன்றைய கூட்டம் நாட்டைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மே தினக் கூட்ட உரையின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேரடியாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராகக் கருத்துகளை வெளியிடவில்லை.

இதேவேளை, நிபுணர் குழு அறிக்கையைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு முயற்சிப்பதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மே தினப் பேரணியின்போது ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவாளர் என்பது உள்ளிட்ட பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டன.

அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். இக்கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

போரின்போது விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததை சிலர் போர்க்குற்றம் என்கின்றனர். இதைச் சிலர் மனித உரிமை மீறல் எனவும் கூறுகின்றனர். முப்பது ஆண்டுகளாகத் தற்கொலை செய்துகொள்வதற்குத் தயாராகவிருந்த ஓர் இனத்திற்கு வாழ வழியமைத்துக் கொடுத்தது மனிதவுரிமை மீறலா? தற்கொலைத் தாக்குதல் நடத்தும் ஒரு சந்ததியை அழிவுப் பாதையிலிருந்து தடுத்து நிறுத்தியுள்ளதை மனிதவுரிமை மீறல் எனக் கூறுகின்றனர். இலங்கையில் மனிதவுரிமை மீறல் நடந்துள்ள தாக அறிக்கை தயாரிப்பவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

இந்த அறிக்கையை யார் தயாரித்தார்கள் என நான் கேட்கப் போவதில்லை. என்னை மின்சார நாற்காலிக்குக் கொண்டு செல்லப் போகின்றனராம். நாங்கள் பிரபாகரனின் தந்தைக்கே ஓய்வூதியம் கொடுக்க அறிவித்திருந்தவர்கள். அது மட்டுமன்றி தற்கொலைத் தாக்குதல் நடத்த வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அமைதியை நாடிச் சென்றவர்கள். நாட்டில் மனிதவுரிமைகள் இடம்பெற்றதாக பொய்க்குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்த எவரும் முனைய வேண்டாம் எனவும் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் சுமார் 3 இலட்சம் மக்களை மீட்கும் நடவடிக்கையை ஐ.நா. முகவர் நிறுவனங்கள் எதிர்பார்த்ததைவிட அரசாங்கம் மனிதாபிமான ரீதியாகவும் கவனமாகவும் மேற்கொண்டது. அதிக எண்ணிக்கையான மீட்பு நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்ட ஒரே நாடாக இலங்கை விளங்குகிறது.

வரலாற்றில் எந்தவொரு நாடும் இவ்வளவு பாரிய மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டதில்லை. நாட்டின் சட்டபூர்வமான படைகளுக்கு எதிராகப் போராடிய பெரும் எண்ணிக்கையான போராளிகளைக் காப்பாற்றி, அவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, பல்கலைக்கழக மட்டம் வரையிலான கல்வியும் வாழ்க்கைத்திறன் பயிற்சிகளையும் அளித்து ஏன் திருமணம் கூட செய்து வைத்து அவர்களைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் பிரஜைகளாக சமூகத்திற்கு அனுப்பி வைத்ததாக வேறு எந்த இராணுவமும் கூறமுடியாது.

இது இலங்கை கொண்டுள்ள தனிச்சிறப்புக்குரிய சாதனையாகும். இதைத்தான் சில குழுக்களும் அமைப்புகளும் போர்க்குற்றம் எனவும் மனிதவுரிமை மீறல்கள் எனவும் கூறுகிறார்கள்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக 3 இலட்சம் பேருக்கு போதுமான உணவுப் பொருட்களை அனுப்புமாறு உலக உணவுத்திட்டம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசாங்கம் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு போதுமான உணவை அனுப்பியது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தற்காலிக முகாம்களுக்கு அனுப்பிய பின் அங்கு மேலதிகமாகவிருந்த உணவுப் பொருட்களை அரசாங்கம் திருப்பி எடுத்துக்கொண்டு வரவேண்டியிருந்தது.

சில ஆயிரம் டொலர்களுக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என சில அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஏனைய அமைப்புகளையும் கோருவதாகவும் ஜனாதிபதி கூறினார். (எ-5,6)

## இல்லாத எதிரியை வள...

வேண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய ரீதியில் நாடுகளுக்கிடையில் கூடுதலான பிணைப்பு காணப்பட வேண்டும். ஆசிய பிராந்திய வலய நாடுகளுக்கிடையில் கூடுதலான ஒத்துழைப்பு அவசியமானது.

நாலாபுறமும் தாக்குதல் நடத்துவதன் மூலம் ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயமானது வெளிநாடொன்றில் செஸ் போட்டியில் விளையாடுவதனைப் போன்று எமக்குச் சாதகமான சூழ்நிலை கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐ.நாவின்...

பகுதியை சென்றடைந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஈழத் தமிழ் மக்கள் மகிந்த அரசின் போர்க் குற்றங்களிற்கு எதிராகவும் தமிழினப் படுகொலைக்கு ஐ.நாவை உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் ஆவேசத்துடன் கோஷமிட்டனர். (ச-5)


## மகளிருக்கான புதிய பயிற்சி வகுப்புக்கள்





1) ஃபேஷியல் (Facials)
2) மணப்பெண் ஒப்பனை (Bridal Make Up)
3) கேக் ஐசிங்
4) தையற்பயிற்சி

மேற்படி தொழில் ரீதியான பயிற்சி வகுப்புகள் எமது நிறுவனத்தில் உடன் ஆரம்பமாக உள்ளன.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை எமது காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.



தூரிகை
நுண்கலை வளாகம்
ம.ம.வி.வீதி, நெல்லியடி

Mobile :- 0779480824

(C-3118)


## பூதாகரமாகும் போர்க்குற்ற...

ஆதரவைப் பெறுவதற்கும் முடிவு செய்துள்ளார்.

அதேவேளை அமைச்சர் பீரிஸின் புதுடில்லி விஜயத்தை தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழுவொன்று அடுத்த மாதம் புதுடில்லி செல்வதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் இவர்களின் விஜயத்திற்கு முன்னர் இந்தியாவின் அபிவிருத்தி மற்றும் மீள்கட்டுமானத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் கொழும்பு மேற்கொண்டுள்ளது.

இதனிடையே அமெரிக்காவுக்குத் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு திரும்பும் பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரியவருகின்றது. (ச-5)

## பாதுகா...

மத்தியில் நாட்டை அழிவிலிருந்து மீட்டதாகவும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலைமை குறித்து கருத்துத்தெரிவித்த கரு ஜெயசூரிய கட்சியை வெற்றிப்பாதைக்கு அழைத்து செல்வதற்கு சிரேஷ்ட தலைவர்களுடன் துடிப்பான இளம் தலைவர்கள் பலரும் முன்வந்துள்ளதாக கூறினார். இந்த சொத்துக்களுடன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ செய்ததைப் போல் இக் கட்சியை மக்களின் கட்சியாக்குவதற்கு முடியும் என்றார். (ச-5)

## இலங்கைக்காக வீட...

கையை விமர்சிக்கும் வகையிலான தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதற்கு ரஷ்யா ஆதரவளிக்கும்.

எவ்வாறு இருந்தபோதும், பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு ஆதரவாகவோ, எதிராகவோ எந்தவொரு தீர்மானமும் கொண்டுவரப்படுவதற்கான நகர்வுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் இலங்கைக்கு ஆதரவாகவே ரஷ்யா நிற்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.